05 MAY 2004

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 23 புதன்கிழமை (05~05~2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:162

## இடைக்காலத் தன்னாட்சி அதிகாரம் குறித்தே முதலில் பேச்சு; அதுவும் காலம் தாழ்த்தாமல்!

### நோர்வே அனுசரணையாளரிடம் தமிழ்க்கூட்டமைப்பு வலியுறுத்தல்

கொழும்பு,மே5

புதிய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் விரைவில் சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அப்பேச்சுக்களில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்தே முதலில் ஆராயவேண்டும். அந்தச் சபையை அமைக்கும் விடயத்தில் காலந் தாழ்த்தாது விரைவாக ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேற்கண்டவாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நோர்வே அனுசரணைக்குழுவிடம் நேரில் வலியுறுத்தியுள்ளனர்.

நேற்றுப்பிற்பகல் நோர்வே அனுசரணைக்குழுவின் விசேட அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரை தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு சந்தித்து

(12ஆம் பக்கம் பார்க்க)

### தொடர்ந்தும் கடுமையாக விமர்சித்தால்

## அனுசரணைப் பணியில் இருந்து விலகிவிடவும் நோர்வே தயார்!

### கூட்டமைப்பினரிடம் எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

கொழும்பு,மே5

இலங்கையின் சமாதான முயற்சிகளின் அனுசரணையாளர் பணியை சேவை மனப்பான்மையுடனேயே மேற்கொள்கின்றோம். இதற்காக எமக்குப் பாராட்டுக்கிடைத்தால் போதும், அது தவிர, வேறு எந்தப் பிரத்தியேக நோக்கமும் எமக்கு இல்லை. எமது பணியை எதிர்த்து தொடர்ந்தும் கடுமையாக விமர்சித்தால் அனுசரணைப்பணியில் இருந்து விலகிவிடவும் நாம் தயாராக இருக்கின்றோம்.

- இவ்வாறு நோர்வேயின் விசேட

(12ஆம் பக்கம் பார்க்க)

### சமாதானப்பேச்சுக்கான உத்திகளை வகுக்க

# பாலசிங்கம் வன்னிக்கு சனியன்று வருகின்றார்!

## வியாழனன்று லண்டனிலிருந்து புறப்பாடு; கிளிநொச்சி வரும் பீற்றர்சனுடனும் பேசுவார்



கிளிநொச்சி,மே5

**கடந்த சுமார் ஓர் ஆண்டு காலமாகத் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான உத்திகளை வகுப்பதற்காக விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இந்தவார இறுதியில் கிளிநொச்சிக்கு வரவுள்ளார்.**

**விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடனும் ஏனைய முக்கிய தலைவர்களுடனும் அவர் கலந்துரையாடல்களை நடத்துவார். அவர் வன்னியில் தங்கியிருக்கும் சமயம் வன்னிக்கு வருகை தரும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனுடனான பேச்சுக்களிலும் கலந்துகொள்வார்.**

தற்போது லண்டனில் தங்கியுள்ள பாலசிங்கமும் அவரது பாரியார் அடேல் பாலசிங்கமும் நாளை வியாழக்கிழமை அங்கிருந்து புறப்படுகின்றனர். கொழும்பு வந்து சேரும் அவர்கள் உடனடியாக அங்கிருந்து ஹெலி மூலம் கிளிநொச்சிக்கு அழைத்துவரப்படுவார்கள். சனிக்கிழமை காலையில் பாலசிங்கம் வன்னியில் இருப்பார் என்று விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கிறார்கள்.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் முன்னெடுப்பது தொடர்பாக இலங்கை அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் கலந்தாலோசனை நடத்துவதற்காக நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் அடுத்தவாரம் இலங்கை வருகின்றார்.

எதிர்வரும் திங்கட்கிழமை கிளிநொச்சிக்கு வரும் அவர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை

(12ஆம் பக்கம் பார்க்க)

## தராகியின் வீடு சோதனை!

கொழும்பு,மே5

தமிழ்-ஆங்கில மொழிகளில் அரசியல் மற்றும் இராணுவக் கட்டுரைகளை வரையும் பிரபல பத்திரிகையாளர் தர்மரட்ணம் சிவராமின் (தராகி) கொழும்பு வீட்டை ஊடக சுதந்திர தினமான நேற்றுமுன்தினம் இரவு இலங்கைப் பாதுகாப்புப் படையினர் இலக்கு வைத்துத் தேடுதல் நடத்தினர்.

பத்திரிகையாளரான சிவராமின் வீடு கல்கிஸையில் இருக்கிறது. ஆனால், களுபோவில பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சுமார் 50 இற்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேடுதல் நடவடிக்கைகளுக்கு தமிழ்க்கூட்டமைப்பு கண்டனம்

கொழும்பு,மே5

கொழும்பில் தமிழர்களின் இருப்பிடங்களில் இடம்பெறும் தேடுதல் நடவடிக்கைகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சிகளின் தலைவர்கள் நேற்றுக் காலை கொழும்பில் கூடி இது தொடர்பான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினர்.

கொழும்பில் தமிழர்களின் இருப்பிடங்களில் ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

பயங்கரவாதிகள் எனப் பெயர் சூட்டி தேடுதல்களை நடத்துவதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

கந்தப் பொலவில் தமிழர்கள் தாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரி. அதிகாரி நேற்று விஜயம்

யாழ்ப்பாணம்,மே5

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் மார்க் வெல்டன் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

தமது துணைவியார் சகிதம் விமானம் மூலம் பலாலிக்கு நேற்றுக் காலை வந்தடைந்த அவர் யாழ் மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவுடன் கலந்துரையாடினார்.

குடாநாட்டின் தற்போதைய நிலை, பாதுகாப்பு நிலைவரம் ஆகியன தொடர்பாக பிரிட்டிஷ் தூதரக அதிகாரி இக் கலந்துரையாடலில் கேட்டறிந்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் தொடர்பாக ரணிலுக்கு சொல்ஹெய்ம் விளக்கம்!

கொழும்பு,மே5

இலங்கையின் புதிய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கச் செய்யும் வகையில் கடந்த சில நாள்களாகத் தாம் மேற்கொண்டு வரும் சமரச முயற்சிகள் குறித்து நோர்வேத் தரப்பு இன்று முன்னாள் பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேரில் விளக்கமளிக்கவிருக்கின்றது.

புதிய அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பிக்கச் செய்யும் முயற்சியாக கடந்த சனியன்று கொழும்புக்கு வந்த நோர்வேயின் அனுசரணைக்குழு நாளை கொழும்பிலிருந்து புறப்படுகின்றது.

இலங்கையில் தமது தற்போதைய விஜயத்தின் கடைசி நிகழ்வாக எதிர்க்கட்சித்தலைவருடனான சந்திப்பை அக்குழு மேற்கொள்ளும் என்று விடயமறிந்தவட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோரைச் சந்தித்த நோர்வேத்தூதுக்குழுவினர், நேற்று இந்தியத்தூதுவர் நிருபம் சென், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

நேற்று மதியம், இலங்கைக்கு உதவும் நாடுகளின் இராஜதந்திரிகளோடு கொழும்பில் அவர்கள் மதிய விருந்துண்டனர்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## முன்நிபந்தனை ஏதுமின்றி எந்தநேரமும் பேச்சைத் தொடங்கப் புலிகள் தயார்!

### அரசு நேற்று அறிவிப்பு

கொழும்பு,மே.5

முன்நிபந்தனை ஏதுமின்றி அரசுக்கு வசதியாக எந்த நேரத்திலும் சமாதானப் பேச்சை ஆரம்பிக்கத் தயார் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நோர்வேத்தரப்பு மூலம் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி செயலகத்தின் ஊடகப்பிரிவின் இயக்குநர் நாயகம் எரிக்பெர்னாண்டோ வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எரிக் சொல்ஹெய்ம், தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், லிஸா கோல்டன ஆகியோரடங்கிய நோர்வேக்குழு, ஜனாதிபதியுடன் தாம் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை விடுதலைப் புலிகளுக்குத் தெரிவித்த பின்னர், கிளிநொச்சியிலிருந்து கடந்த 3 ஆம் திகதி திரும்பியதும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்து விளக்கியது. இந்தப் பேச்சுக்கள் இரண்டு மணி நேரத்துக்கும் அதிகமாக நீடித்தன.

அரசுக்கு வசதியான எந்த நேரத்திலும் அரசுடனான பேச்சுக்களை ஆரம்பிக்கப் புலிகள் முழுத்தயாராக இருக்கின்றார்கள் என்பதைத் தமிழ்ச்செல்வன் கோடிகாட்டினார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது 40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.



இச்சலுகை 2004 ஒக்டோபர் 15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வட்டி:
*14% ஸ்திரி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு
*15% ஏனையோருக்கு

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.

— 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
— 2வது பரிசு 1.6மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
— 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
— 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
— 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
— 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.

NSB

NSB தேசிய சேமிப்பு வங்கி

# எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்த ஹக்கீம் தனித்தரப்பை மீண்டும் வலியுறுத்தினார்

கொழும்பு,மே5

நோர்வேயின் விசேட அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழு நேற்று முற்பகல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் யாப்புக்குழுவை அதன் தலைவர் ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் சந்தித்து சுமார் ஒருமணிநேரம் உரையாடியது. இந்தச்சந்திப்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், எதிர்கால சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் நிலைப்பாடு என்னவென்று நோர்வேக் குழுவினரிடம் வினாவினார். அத்தோடு மூன்று விடயங்களையும் அவர் சுட்டிக்காட்டினார் என அக்கட்சியின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

* சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கும் தனித்தரப்பு வழங்கப்படவேண்டும் என்ற பிரேரணை தொடர்பாக முன்னைய அரசு சாதகமான நிலைப்பாட்டைக்கொண்டிருந்தது.
* டோக்கியோவில் நடந்த உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தின் பிரகடனத்திலும் அதுவே தெரிவிக்கப்பட்டது.
* சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்குவது தொடர்பாக கடந்த அரசின் காலத்தில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஒத்திவைப்பு விவாதத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் பேசிய (இப்போதைய வெளிவிவகார அமைச்சர்) லகஷமன் கதிர்காமர் தனித்தரப்பு வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

இவ்விடயங்களைச்சுட்டிக்காட்டி தனித்தரப்புக் கோரிக்கையை ஹக்கீம் மீண்டும் வற்புறுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பதிலளித்துப் பேசிய நோர்வேத் தூதுக்குழுவினர், கடந்த அரசாங்கம விட்ட இடத்தில் இருந்து பேச்சுத் தொடர வேண்டும் என்று விடுதலைப் புலிகள் விரும்புகின்றார்கள் எனவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிலைப்பாட்டையும் அக்கறையையும் அரசாங்கத்திடமும் விடுதலைப் புலிகளிடமும தாம் வலியுறுத்துவார்கள் எனவும் ஆனால் இறுதியில் அரசாங்கமே முடிவு செய்யவேண்டும் எனவும் தெரிவித்தனர்.

நோர்வேக்குழுவில் நோர்வேக்கான இலங்கைத்தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும், முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அரசியல் யாப்புக்குழு உறுப்பினர்களான கட்சியின் செயலாளர் நாயகமும், எம்பியுமான எம்.ரீ.ஹசன் அலி, திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காஸிம், ஏ.எம்.நௌஷாட், வை.எல்.எஸ்.ஹமீட், சட்டத்தரணி ஏ.எம் பாயிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர் என முஸ்லிம் காங்கிரஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (க)

## கைவிடப்பட்ட முகாம் பகுதியிலிருந்து

# முட்கம்பியை எடுக்க முயற்சித்த இளைஞர் மிதிவெடியில் சிக்கினார்!

யாழ்ப்பாணம்,மே5

உரும்பிராய் பகுதியில் இராணுவத்தினரால் கைவிடப்பட்ட முகாம் ஒன்றில் இருந்த முட்கம்பியை சுருட்டி எடுக்க முயற்சித்த இளைஞர் ஒருவர் மிதிவெடியில் சிக்கிக் கண்ணில் படுகாயமடைந்தார். அவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோண்டாவில் செல்வபுரத்தைச் சேர்ந்த அன்னலிங்கம் - சஞ்சீவன் (வயது - 19) என்ற இளைஞரே இச்சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார்.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் கோண்டாவில் - உரும்பிராய் வீதியிலுள்ள மூன்று கோயில் பகுதியில் இராணுவத்தால் கைவிடப்பட்ட முகாம் ஒன்றில் இருந்த முட்கம்பியை இந்த இளைஞர் குனிந்து இழுத்து எடுத்தபோதே மிதிவெடி வெடித்ததாகக் கூறப்பட்டது.

இளைஞரின் வலது கண்ணில் பலத்த காயம் ஏற்பட்டதுடன் உடம்புப் பகுதியிலும் சிறுகாயங்கள் ஏற்பட்டன. (ஒ-7)

# கம்பிக்கொடியில் மின் பாய்ந்தது; உடையை உலரப் போட்டவர் பலி!

## உடுப்பிட்டியில் சம்பவம்

வீட்டில் கம்பிக்கொடியில் உடைகளை உலரப்போட்டவர் அதில் மின்சாரம் பாய்ந்திருந்ததால் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். உடுப்பிட்டி சன்னதி கோயில் வீதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த வர்த்தகரான இரத்தினம் சிவசுந்தர இரத்தினம் (வயது 52) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் நேற்றுக்காலை 6 மணியளவில் வீட்டில் உள்ள கிணற்றில் குளித்துவிட்டு, ஈரஉடைகளை கம்பியினால் கட்டப்பட்ட கொடியில் காயப் போட்டார் என்றும் -

அவ்வேளையில் வீட்டின் மின் இணைப்பு 'வயர்', கம்பிக்கொடியுடன் உராய்ந்ததில் கம்பிக்கொடியில் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்தது என்றும் -

இதனால், ஈர உடையைக் கம்பிக் கொடியில் காயப்போட்ட அவர் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தார் என்றும் -

தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணையை வல்வெட்டித்துறைப் பொலஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-9-70)

# தனிக்கட்சி அமைப்பதில் மயோன் முஸ்தபா மும்முரம்

சாய்ந்தமருது,மே5

ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.மயோன் முஸ்தபா உலமாக்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள ஆகியோருடன் ஒன்றிணைந்து தனிக்கட்சி ஒன்றை ஆரம்பிப்பார் என்பது உறுதியாகிவிட்டது எனத் தெரிகிறது.

இதற்கென இவர் கொழும்பில் புத்திஜீவிகள் பலரை அழைத்து ஆலோசனைக் கூட்டமொன்றையும் நடத்தியிருக்கிறார்.

தற்போதைய சூழலில தனிக்கட்சியின் அவசியம் பற்றி கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் மத்தியில பல கருத்தரங்குகள் தொடராக நடத்தப்பட்டு இறுதியில் பேராளர் மாநாடு ஒன்றைக் கூட்டவும் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்பேராளர் மாநாட்டில் கட்சியின பெயரையும் இதற்கான தலைவர், செயலாளர், பொருளாளர், பிரதேச அமைப்பாளர் ஆகியோரையும் தெரிவு செய்யவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

புதிய அரசியல் கட்சியில் மஜ்லிஸ்சூரா, அரசியல் உயர்பீடம், புத்திஜீவிகள் கொண்ட ஆலோசனைச் சபை என்பனவும் அடங்கியிருக்கும் எனக் கூறப்படுகிறது. (க)

# ஐ.தே.கட்சியின் தலைமையில் விரைவில் புதிய மாற்றங்கள்

## ராஜித, எஸ்.பி., சஜித் முன்னுக்கு வருவர்

கடந்த பொதுத்தேர்தலில் தோல்வியைச் சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சி, தனது கட்சித் தலைமைப் பொறுப்புக்களை மறுசீரமைப்பதன் மூலம் கட்சியை வலுப்படுத்தத் தீர்மானித்திருக்கின்றது எனக் கூறப்படுகின்றது.

தலைமைப் பொறுப்புக்களில் அடுத்த வாரம் அளவில் மாற்றங்கள் வரலாம் என விடயமறிந்த வட்டாரங்கள் ஊகம் தெரிவித்தன.

அண்மையில் கூடிய ஐ.தே.கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் கட்சியை மீண்டும் வலுவுள்ளதாக்குவதற்கான வழிவகைகள் குறித்து ஆராயப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டு ஆட்சிக்காலத்தில் கட்சியின் தலைமை செயற்பட்ட விதம் இந்தக் கூட்டத்தில் கடும் விமர்சனத்துக்கு உள்ளானது.

கட்சித்தலைமை மறுசீரமைக்கப்படும் போது ராஜித சேனாரத்ன, எஸ்பி. திஸாநாயக்க, முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் மகன் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்குப் பொறுப்பான பதவிகள் வழங்கப்படலாம் என ஊகம் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# உயர்தரப் பரீட்சை நாளை ஆரம்பம்

கொழும்பு,மே5

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நாடு முழுவதிலும் நாளை ஆரம்பமாக இருக்கிறது.

ஆயிரத்து 765 பரீட்சை நிலையங்களில் இரண்டு லட்சத்து 40 ஆயிரத்துக்கும் அதிகமான பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றார்கள்.

இப்பரீட்சை 31 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குரிய பரீட்சை நிலையங்களில் அமைந்துள்ள பாடசாலைகள் இக்காலத்தில் நடைபெறமாட்டா. அவற்றுக்கு விசேடமாக விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சை கடந்த ஏப்ரல் மாதத்தில் - பாடசாலைகளின் முதலாம் தவணை விடுமுறை காலத்தில் - நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால், திடீரென ஏப்ரல் முற்பகுதியில் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதால், அது ஒத்திவைக்கப்பட்டு தற்போது நடத்தப்படுகின்றது. (க)

## கந்தப்பொல கலவரத்தைக் கண்டித்து

# வடக்கு–கிழக்கிலும் ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கு முஸ்தீபு

கந்தப்பொலவில் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட கலவரத்தைக் கண்டித்து வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஒருநாள் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் எனத் தெரிகின்றது.

கந்தப்பொலவில், மலையகத் தமிழர் மீது மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித் தனமான தாக்குதலை ஆட்சேபித்து வடக்கு - கிழக்கு தமிழர்களும் தமது கண்டனத்தை வெளியிட வேண்டும் என மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார் எனக் கூறப்படுகின்றது.

அதையடுத்தே வடக்கு -கிழக்குப் பகுதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடம் கூட்டுக் கட்சிகளோடு கலந்தாலோசித்து இறுதிமுடிவு எடுக்கும் எனவும் -

வடக்கு-கிழக்கில் ஹர்த்தால் நடத்துவது கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது எனவும் - பெ.சந்திரசேகரன் எம்.பி.தெரிவித்தார்.

இதேசமயம், எதிர்வரும் சனிக்கிழமை கொழும்பில் கடையடைப்புப் போராட்டம் ஒன்றையும், கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் மேற்கொள்ள மேல்மாகாண மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

# குடாநாட்டிலும் நேற்று 'வெசாக்' கொண்டாட்டம்

குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று 'வெசாக்' பௌர்ணமி தினத்தை மத சம்பிரதாயங்களுடன் கொண்டாடினர். படைமுகாம்கள் மற்றும் காவலரண்கள் முன்பாக வெளிச்சக்கூடுகள், அலங்காரப்பந்தல்கள் என்பன அமைக்கப்பட்டிருந்தன.

வெசாக் தினமான நேற்றிரவு 8.30 மணியளவில் யாழ்.நாகவிகாரையில் விசேட பூசைகள் மற்றும் வழிபாடுகள் இடம்பெற்றன. இதில் படையினர் உட்பட பௌத்தர்கள் பலரும் கலந்துகொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர். அப்பகுதியில் படையணிகள் தனித்தனியே 'வெசாக்' கூடுகளை அமைத்திருந்தன.

குடாநாட்டில் குறிப்பாக முகமாலைப் பகுதியில் நேற்றுப் படையினர் பொதுமக்களுக்குக் குளிர்பானங்கள் மற்றும் உணவுப் பொதிகள் ஆகிய வற்றை விநியோகித்தனர்.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் உணவுப பொதிகளைப் படையினர் வழங்கினர். (ஒ-10-9-15-70)



யாழ். ஆரியகுளம் பகுதியில் நாகவிகாரை அருகே படையினர் அமைத்திருந்த வெசாக் கூடுகளில் சில... (படங்கள்:ராஜ்)

# மினிபஸ்களில் திருடர்கள் கைவரிசை: பெறுமதிமிக்க பொருள்கள் அபகரிப்பு!

யாழ்ப்பாணம்,மே5

மினிபஸ்களில் நிலவும் சனநெருக்கடியைப் பயன்படுத்தித் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

சனக்கூட்டம் நிறைந்த பஸ்களில் மக்களோடு மக்களாக ஏறுகின்ற திருடர்கள் அதில் பயணம் செய்யும் மக்களின் கைப்பைகள் மற்றும் பணப் பைகளைத் திருடிக் கொண்டு தப்பித்து விடுகின்றனர்.

இதனால் மக்கள் தமது நகைகள், பணம் என்பனவற்றை மட்டுமன்றி பெறுமதிமிக்க ஆவணங்களையும் இழக்க நேரிடுகிறது. இவ்வாறான சம்பவமொன்று நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.45மணியளவில் யாழ்நகரில் இருந்து சென்ற ஒரு மினிபஸ்ஸில் இடம்பெற்றுள்ளது.

ஆறுகால்மடத்தைச் சேர்ந்த கந்தசாமி தவமணிதேவி என்பவரது கைப்பையில் இருந்த மூன்றரைப்பவுண் அட்டியல், பணம் மற்றும் அடையாள அட்டைகள் என்பனவே பஸ்ஸினுள் களவாடப்பட்டுள்ளன.

சம்பவத்தை அறிந்த அவரது கணவர் மோட்டார் சைக்கிளில் குறிப்பிட்ட மினிபஸ்ஸைப் பின்தொடர்ந்து சென்று மானிப்பாய் பொலீஸாரின் உதவியுடன் சோதனை நடத்திய போதும் திருடனைப் பிடிக்க முடியவில்லை. (ஐ-10)

## நூல்வெளியீடு

ஆசிரியர் வி.ஜெயபாலனின் 'மௌன தரிசனங்கள்' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் அதிபர் நா.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (10)

## கும்பாபிஷேகம்

கொடிகாமம்,மே5

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாதர் சிவன் கோயில் புதிதாக அமைக்கப்பட்ட முருகன் மற்றும் சந்தான கோபாலர் சந்நிதிகளின் கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஒ-74)

## மாட்டிறைச்சி எடுத்துச் சென்ற நபர் கைது!

யாழ்ப்பாணம்,மே5

பௌர்ணமி விடுமுறை தினமான நேற்று மாட்டிறைச்சியை விற்பனைக்குக் கொண்டுசென்றவர் என்று கூறப்படும் நபர் ஒருவர் யாழ்.பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த இந்த நபர் 30கிலோ நிறையுடைய மாட்டிறைச்சியை மோட்டார் சைக்கிள் ஒன்றில் வேறோர் இடத்துக்குக் கொண்டு சென்றார் என்றும் -

அப்போது வழியில் வைத்து யாழ். பொலீஸார் சம்பந்தப்பட்ட நபரைக் கைது செய்ததுடன் இறைச்சியையும் பறிமுதல் செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-7)

# மட்டு. - அம்பாறை மாவட்டங்களுக்கான போக்குவரத்துக்கு இரவில் தடை!

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,மே5

மட்டு.,-அம்பாறை மாவட்டத்திற்குள் உள்நுழைவதற்கும் அங்கிருந்து வெளியேறுவதற்குமான சகல பிரதான வீதிகளும் இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை மூடப்பட்டிருக்கும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கிழக்கு இராணுவத் தளபதி, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய முத்தரப்பினரின் சம்மதத்துடன் இந்த நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ள தாகவும் - அதிகார மளிக்கப்படாதவர்கள் ஆயுதங்களுடன் நடமாடுவதைத் தடுப்பதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் குறிப்பிட்ட பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேசமயம், நோயாளிகள் மற்றும் அவசரத் தேவைகளுக்காக செல்வோருக்கு இக்காலப்பகுதியில் விசேட அனுமதி வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## சுற்றுப்போட்டி பிற்போடல்

நாட்டுப் பற்றாளர் வி.ரி.ஏ.விஸ்வா ஞாபகார்த்தமாக திருநெல்வேலி ஞானவைரவர் விளையாட்டுக் கழகம் முடமாவடி பூங்கனிச்சோலையின் அனுசரணையுடன் நடத்தும் வடமாகாண ரீதி யிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி காலநிலை சீரின்மை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

சுற்றுப்போட்டி நேற்று ஆரம்பமாக விருந்த போதும் மழை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது. (10-5)

# பாகிஸ்தானில் கார்க்குண்டு வெடிப்பு; சீனப் பொறியியலாளர்கள் மூவர் பலி!


குண்டுவெடிப்பில் காயமடைந்த ஒருவர்

தென்மேற்கு பாகிஸ்தானில் க்வாதர் துறைமுகம் அருகே கடந்த திங்கட் கிழமை கார்க்குண்டு வெடித்ததில் சீனப்பொறியியலாளர்கள் 3பேர் கொல்லப்பட்டனர்; 11பேர் காயமடைந்தனர். தீவிரவாதிகளின் வெறிச்செயலாக இது இருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

கராச்சிக்கு மேற்கே 500கி.மீ. தொலைவில், ஈரான் எல்லையருகே காலை 9.40 மணியளவில் இச்சம்பவம் நடந்தது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இதில் 3பேர் கொல்லப்பட்டனர்; 11பேர் காயமடைந்தனர். இது தீவிர வாதிகளின் வெறிச்செயலாக இருக்கலாம் என்று அந்த அதிகாரி கூறினார்.

வெடித்த காரின் பாகங்களைத் தவிர, அதன் உள்ளே தீவிரவாதியின் எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. பொறியியலாளர்கள் பயணம் செய்த பேருந்தும் மோசமாகச் சேதமடைந்தது.

வெடிகுண்டு செயலிழப்புப் படை, கடல் கண்காணிப்புப் படை, பாக். கடற்படை அதிகாரிகள் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று குண்டு வெடிப்பிற்கான தடயங்களை ஆராய்ந்தனர். பொலீஸார் வழக்குப் பதிவு செய்து, தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் சீனர்கள் குறிவைத்துத் தாக்கப்படுவது இதுவே முதல் முறை. பாகிஸ்தானின் முக்கியமான தோழமை நாடாகவும் வர்த்தகப் பங்குதார நாடாகவும் சீனா உள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

## உலக அரங்கில்

இது குறித்து க்வாதர் தலைமை பொலீஸ் அதிகாரி சத்தார் லஸி கூறியதாவது:-

கவாதரில் பலகோடி ரூபாய் முதலீட்டில் கடல்துறைமுகக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்கட்டுமானப் பணிகளை, சீன இன்ஜினியரிங் ஹபார் கம்பனி மேற்பார்வையிட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் பொறியியலாளர்களும் தொழில்நுட்ப வல்லுநர்களும் சேர்ந்து 450 பேர் பணிபுரிகின்றனர்.

இவர்களில் 12சீனப் பொறியியலாளர்களை ஏற்றிய பேருந்து, காலை 9.40மணியளவில் துறைமுகத்துக்குச் சென்றுகொண்டிருந்தது. அப்பேருந்து துறைமுகத்தை அடைந்தபோது, கார் நிறுத்தும் இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த வெள்ளை நிற சுசுக்கி ஆல்டோ கார் ஒன்று திடீரென வெடித்துச் சிதறியது.

### மத்திய கிழக்குத் தொடர்பான

# அதிபர் புஷ்ஷின் கொள்கைக்கு அமெ. இராஜதந்திரிகள் கண்டனம்

## ஷெரோனை ஆதரிப்பதாகவும் குற்றச்சாட்டு

வாஷிங்டன்,மே.5

மத்திய கிழக்குத் தொடர்பாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கடைப்பிடிக்கும் கொள்கையைக் கண்டித்து ஓய்வுபெற்ற சுமார் 50 அமெரிக்க ராஜதந்திரிகள் அவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

ஓய்வுபெற்ற 52 பிரிட்டன் ராஜதந்திரிகள் கடந்த வாரம் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயருக்கு எழுதிய கடிதம் ஒன்றைப் போலவே இந்தக் கடிதமும் அமைந்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

அதிபர் புஷ்ஷின் மத்திய கிழக்குத் தொடர்பான அணுகுமுறையானது நம்பகத் தன்மையையும் கண்ணியத்தையும் மட்டுமல்ல நண்பர்களையும் இழந்துவருகின்றது என்று அமெரிக்க ராஜதந்திரிகள் கண்டித்துள்ளனர்.

இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷெரோனை வாஷிங்ரன், வெட்கமில்லாமல் ஆதரித்து வருகின்றது என்று அவர்கள் கூறியுள்ளனர்.


புஷ்ஷுடன் ஷெரோன்

காஸாவிலிருந்து இராணுவ ரீதியில் வாபஸ் பெறுவதென்று ஷெரோன் எடுத்துள்ள முடிவை புஷ் நிர்வாகம் அங்கீகரித்திருப்பது குறித்து இந்த ராஜதந்திரிகள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க அரசு பெரும் ஆபத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. இரு அரசியல் கட்சிகளும் அனுபவமிக்க ராஜதந்திரிகளின் குரல்களுக்கு செவிமடுப்பார்கள் என்று நம்புகின்றோமென அவர்களின் கடிதம் கூறுகின்றது. ஷெரோனின் சட்டவிரோதக் கொலைகள், பேர்லின் சுவர் போன்ற இஸ்ரேலின் தடுப்புச் சுவர், ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் குரூரமான அதன் இராணுவ நடவடிக்கைகள் போன்றவற்றை வெட்கமில்லாமல் ஆதரிக்கிறீர்கள், ஷெரோனின் இராணுவ நடவடிக்கைகள் அமெரிக்காவின் நம்பகத்தன்மை, கண்ணியம் மற்றும் நட்பு எல்லாவற்றையும் பறித்திருக்கிறது என்று அவர்கள் கண்டித்துள்ளனர். (ப-8)


ஈராக்கில் கைதிகளை அமெரிக்க இராணுவத்தினர் மோசமாக நடத்திய படங்கள் அண்மையில் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன. அவற்றில் ஒன்றுதான் இது. பக்தாத்தின் அபூஹிராய்ப் சிறைச்சாலையில் ஈராக்கியக் கைதிகளை நிர்வாணமாக்கி கோபுரமாக வடிவமைத்து அதன் பின்னால் நின்றுகொண்டிருக்கும் அமெரிக்க இராணுவத் தளபதி ஒருவர்.

# அந்தரத்தில் அணிவகுப்பு



அமெரிக்க ராணுவத்தின் பரசூட் படைப்பிரிவு வீரர்கள் சாகச நிகழ்ச்சிகளை அண்மையில் நடத்தினார்கள். புளோரிடா மாநிலத்தில் கடலுக்கு மேலே மக உயரத்தில் இருந்து விமானத்தில் இருந்து பரசூட் மூலம் அணி அணியாகக் குதித்து அந்தரத்தில் அணிவகுப்பு நடத்தினார்கள்.

அணி வகுப்பு நடைபெறும் காட்சியைப் படத்தில் காணலாம். (8)

# பா.ஜ.க. கூட்டணிக்குப் பெரும்பான்மை; தொங்கு நாடாளுமன்றம் அமையாது

## 'ஸ்டார் நியூஸ்' ரீ.வி. கருத்துக்கணிப்பு

புதுடில்லி,மே5

பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 267 முதல் 279 ஆசனங்கள் வரை கிடைக்கும் என்று ஸ்டார் நியூஸ் ரெலிவிஷன் நிறுவனம், டெலிகிராப், தைனிக் பாஸ்கர் ஆகிய பத்திரிகைகள் கூட்டாக எடுத்த கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. தொங்கு நாடாளுமன்றம் ஏற்படாது என்று அவை ஆறுதல் கூறியுள்ளன.

பாரதீய ஜனதாக் கூட்டணிக்குக் குறைந்தபட்சம் 267 ஆசனங்களும் அதிகபட்சம் 279 ஆசனங்களும் கிடைக்கும் என்று கருத்துக்கணிப்பு தெரிவிக்கின்றது.

காங்கிரஸ் கூட்டணிக்குக் குறைந்தபட்சம் 169 ஆசனங்களும் அதிகபட்சம் 181 ஆசனங்களும் கிடைக்கும்.

இவ்விரு கூட்டணிகளிலும் சேராத பிறகட்சிகளுக்கு 88 ஆசனங்கள் முதல் 100 ஆசனங்கள் வரை கிடைக்கக்கூடும்.

நாலாவது கட்டத்தில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 83 தொகுதிகளில் பா.ஜ.க. கூட்டணிக்கு 48 முதல் 56 ஆசனங்களும் காங்கிரஸ் கூட்டணிக்கும் 12 முதல் 20 ஆசனங்களும் பிற கட்சிகளுக்கு 11 முதல் 19 ஆசனங்களும் கிடைக்கும் என்று இக்கணிப்புத் தெரிவிக்கின்றது.

6,000 பேரிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டன. 4 மாநிலங்களில் 65 தொகுதிகளில் ஏப்ரல் 28 திகதி முதல் மே 2 வரை பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இம்முடிவு வெளியிடப்படுகிறது என்று ஸ்டார் நியூஸ் நிறுவனத்தின் பத்திரிகைக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

இன்று வாக்குப் பதிவுகள் நடைபெறவுள்ள உத்தரப்பிரதேசத்தின் 30 தொகுதிகளில் 13 தொகுதிகள் பா.ஜ.கவுக்கும், காங்கிரஸ், பகுஜன் சமாஜ் கட்சிகளுக்கு தலா 4 ஆசனங்களும் சமஜாவாதி கட்சிக்கு 9 ஆசனங்களும் கிடைக்கும் என்று தெரிகிறது.

பிகாரின் 40 தொகுதிகளில் எஞ்சியுள்ள 12 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெறவிருக்கிறது. அவற்றில் 8 ஆசனங்கள் பா.ஜ.க. கூட்டணிக்கும், ராஷ்ட்ரீய ஜனதா தள கூட்டணிக்கு (காங்கிரஸ் உட்பட) 3 ஆசனங்களும் மற்றவர்களுக்கு ஒரு இடமும் கிடைக்கும் என்று கணிப்புத் தெரிவிக்கின்றது.

ராஜஸ்தானின் 25 ஆசனங்களில் 18 பா.ஜ.கவுக்கும் மற்றயவை காங்கிரஸுக்கும் கிடைக்கும்.

மத்தியப் பிரதேசத்தில் வாக்குப் பதிவு நடைபெறவுள்ள 12 தொகுதிகளில் 10 தொகுதிகள் பா.ஜ.கவுக்கும் 2 காங்கிரஸுக்கும் கிடைக்கும்.

இத்தகவல்களை ஸ்டார் நியூஸ் தொலைக்காட்சி நிறுவனச் செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது. (8)

# இந்தியாவில் 83 தொகுதிகளில் 4ஆவது கட்ட வாக்குப்பதிவு இன்று

புதுடில்லி,மே5

இந்தியாவில் நடைபெற்றுவரும் பதின்நான்காவது மக்களவைத் தேர்தலில் நான்காவது கட்டமான 83 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

பிரதமர் வாஜ்பாய், ராஸ்ட்ரிய ஜனதா தளத் தலைவர் லாலு பிரசாத் யாதவ், சமாஜவாதி தலைவர் முலாயம்சிங் யாதவ், மத்திய அமைச்சர்கள் முரளி மனோகர் ஜோஷி, சரத் யாதவ், காஷ்மீரின் மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் மெஹ்பூபா முப்தி உள்ளிட்டோர் போட்டியிடும் தொகுதிகள், இன்று தேர்தல் நடப்பவற்றில் முக்கியமானவை.


ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள 25 தொகுதிகள், உத்தரப் பிரதேசத்தில் மொத்தமுள்ள 80இல் 30 தொகுதிகள், மத்தியப்பிரதேசத்தில் மொத்தமுள்ள 29இல் 12 தொகுதிகள், பீஹாரில் மொத்தமுள்ள 40இல் 12 தொகுதிகள், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ஒரு தொகுதி, நாகாலாந்தில் ஒரு தொகுதி, அருணாசலப் பிரதேசத்தில் இரு தொகுதிகள் ஆகியவற்றில் இன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இத் தொகுதிகளில் மொத்தம் 921 வேட்பாளர்கள் போட்டியிடுகினறனர். அவர்களில் 64 பேர் பெண்கள். இவர்களில் 83 பேரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு 10 கோடியே 72 லட்சம் வாக்காளர்களின் கைகளில் உள்ளது.

இத்தொகுதிகளில் பாதுகாப்புப் பணியில் துணை இராணுவப் படைகளைச் சேர்ந்த 90 ஆயிரம் வீரர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். மத்திய ரிசேவ் பொலீஸ் படை, எல்லைப் பாதுகாப்புப் படை, மத்தியத் தொழிலகப் பாதுகாப்புப் படை, இந்தியத் திபெத் எல்லைப் படை, ரயில்வே பாதுகாப்புப் படை, சிறப்பு அதிரடிப் படை, மாநில ஆயுதப்படைப் பொலீஸ் ஆகியவற்றைச் சேர்ந்த வீரர்கள் இதில் அடங்குவர்.

இதில் மூன்றில் ஒரு பங்குக்கு மேற்பட்ட வீரர்கள், அதாவது 33,300 பேர் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள அனந்த்நாக் தொகுதியில் மட்டும் பாதுகாப்புப் பணியைக் கவனிப்பார்கள். (8)

# இந்திய சினிமாவில் ஜொலிக்கும் ஈழத்தமிழ் நட்சத்திரம்




'ரோஜாவனம்' தமிழ்த் திரைப் படத்தில் கதாநாயகர்கள் இருவர். ஒருவர் கார்த்திக்; மற்றவர்...?

'ரோஜாக் கூட்டம்' பார்த்தீர்களா? அதில் ஒருவர் ஸ்ரீகாந்த; மற்றவர்...?

'இனிது இனிது காதல் இனிது' படத்தில் கதாநாயகனாக நடித்திருந்தாரே...? 'த்ரீரோஸஸ்' படத்தில் நடிகை லைலாவுடன் இணைந்து ஒரு பாடலுக்கு நடனம் கூட ஆடியிருந்தாரே.

அவர்தான் பிரபல நடிகர் ஆகாஷ்; ஜெய் ஆகாஷ்.

இந்திய சினிமாவில் முன்பெல்லாம் கூட இலங்கையைச் சேர்ந்த பல கலைஞர்கள் நடித்திருக்கிறார்கள். அந்த வரிசையில் இப்போது - கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தன்னையும் இணைத்துக்கொண்டிருப்பவர்தான் நடிகர் ஆகாஷ். இவருடைய சொந்த இடம் யாழ்ப்பாணம், தாவடி.



நடிகர் விக்ரமுடன் ஆகாஷ்

தமிழில் வெளியான 'ரோஜாவணம்' என்ற படத்தில் இரண்டாம் தரக் கதாநாயகனாக அறிமுகமாகிய இவர் இது வரை நான்கு தமிழ்ப் படங்களில் நடித்திருக்கின்றார்.



'ஆனந்தம்' தெலுங்கு படத்தில் சிறந்த நடிகருக்கான விருதினை நடிகர் பாண்டியராஜனிடம் பெறுகிறார்

தெலுங்கு மொழியில் 'ஆனந்தம்' என்ற படத்தின் மூலம் கதாநாயகனாக நுழைந்துகொண்ட ஆகாஷ் இதுவரை 15 தெலுங்கு மொழிப் படங்களில் நடித்திருக்கிறார். இந்த நடிகர் தெலுங்கில் 'ஆனந்தம்' படத்தின் மூலம் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறார்.

தற்போது சிறு விடுமுறையில் தனது சொந்த ஊரான யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கின்ற இவரை தாவடியில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

இரவு 10 மணியிருக்கும்........

வீட்டிற்குப் போனபொழுது தாய், தந்தை, சகோதரிகள் மட்டுமே இருந்தார்கள். உள்ளே சென்று அறிமுகம் செய்தோம்.

நடிகர் ஆகாஷைப் பார்க்கவேண்டும்...

மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்று உட்காரவைத்தார்கள்.

ஆகாஷ் தனது நண்பர்களுடன் சுன்னாகத்தில் உள்ள திரையரங்கு ஒன்றிற்குப் படம் பார்க்கச் சென்றிருக்கிறார். இப்போது வந்துவிடுவார். சிறிது நேரம் உட்கார்ந்திருங்களேன்.

தந்தை நாகேஷ்வரன் பேசினார்.

லண்டனில் சட்டத்தரணியாக இருக்கிறார் நாகேஸ்வரன்.

வாசலில் ஓட்டோ ஒன்று வந்து நின்றது. ஆகாஷ்தான் வருகிறார்.

வந்திறங்கியதும் தந்தையாரே அவரிடம் விடயத்தைக் கூறினார்.

மறுப்பு எதுவும் இன்றி உடனே சம்மதித்து எங்களுடன் பேசத் தொடங்கினார்.

*கேள்வி: சினிமாவில் நுழைய வேண்டும் என்ற ஆர்வம் எப்படி வந்தது?*

"இந்த ஊர்ல சின்னப் பையனாக இருக்கும்போதே நல்லா 'டான்ஸ்' பண்ணுவேன். இங்கிருந்து சிறுவயதிலேயே குடும்பத்துடன் லண்டனுக்குச் சென்றேன். அங்கு 'புரோக்கிராம்ஸ்', 'பார்ட்டி' என்பவற்றில் விருப்பத்துடன் 'டான்ஸ்' ஆடுவேன் (பெரியவனாக வந்த பிறகும் கூட). அப்போது என்னோட நண்பர்கள் சிலர் "ஆகாஷ் நீ சினிமாவில 'டான்ஸ்' பண்ணினா நல்லா இருக்கும்" என்றார்கள்.

"அப்போது எனக்கும் அப்படி ஒரு சிந்தனை ஏற்பட்டது. அதுவே கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து எப்படியாவது சினிமாவில் ஒரு பாடலுக்காவது டான்ஸ் பண்ணவேண்டும் என்ற ஆசையாக வளர்ந்துகிட்டே போனது. அதுக்கு ஒரு 'சான்ஸ்' கிடைக்காதா என்று ஏங்கிக்கிட்டிருந்தேன்."

*கேள்வி: அதற்கான சந்தர்ப்பம் எப்படிக் கிடைத்தது என்று சொல்ல முடியுமா?*

"லண்டன் மிடிக்ஸ் யூனிவேர்சிட்டில பி.எஸ்.ஸி. முடிச்சிருந்தேன். அங்கு பிரபல்யமான கம்பனி ஒன்றில் சிஸ்டம் எஞ்சினியராக (System Engineer) பணியாற்றினேன்.

**செவ்வி: அற்புதன்**

"ஒரு தடவை 'இன்ரநெற்' பார்த்துக்கிட்டிருக்கும்போது டைரக்டர் மணிரத்னத்தோட 'அட்ரஸ்' கிடைச்சிது. அதில் 'சினிமாவில் நடிப்பதற்கு விரும்புபவர்கள் தங்கள் சுய விவரத்தையும் புகைப்படம் ஒன்றையும் அனுப்பிவையுங்கள்' என்று இருந்தது. எனக்கு நம்பிக்கையில்லை. இருந்தாலும் என்னோட விவரத்தை அனுப்பிவைச்சேன்.

"பின்பு ஒரு தடவை விடுமுறையில் இந்தியாவுக்குப் போனேன். அப்படியே "டைரக்டர்" மணிரத்தினம், சுபாசினி போன்றோரைச் சந்திக்க விரும்பி அவர்களது இடத்துக்குப் போனேன். என்னை அறிமுகப்படுத்தினேன். என்னுடைய விருப்பத்தைக் கூறினேன்.

ரீ.வி. சீரியல் ஒன்றில் நடிக்க முடியுமா என்று கேட்டார்கள். நான் மறுத்துவிட்டேன். சினிமாவில ஒரேயொரு பாடலுக்கு 'டான்ஸ்' பண்ண சான்ஸ் இருந்தா கொடுங்களேன், அதுபோதும் என்று கேட்டேன்.

பின்னர் தொடர்புகொள்வதாகக் கூறி அனுப்பிவிட்டார்கள். என்னோட லீவு முடியிறதுக்கு மூணு நாள் இருக்கும்போது டைரக்டர் கே.பாலச்சந்தரின் 'கவிதாலயா' கலையகத்தில் இருந்து போன் வந்தது. என்னோட விவரத்தைச் சுபாசினி மேடம் கொடுத்திருந்தாங்களாம். உடனே தங்கள வந்து பார்க்கச் சொன்னாங்க புறப்பட்டேன்.

"அங்கு 'ரோஜாவனம்' என்ற படத்தில் கார்த்திக்குடன் இரண்டாவது கதாநாயகனாக நடிக்க என்ன 'செலக்ட்' பண்ணியிருந்ததாகச் சொன்னாங்க.

"அப்படியே 'ஷாக்' ஆயிட்டேன். கடவுள் தந்த வரம்னு நினைச்சு உடனே சம்மதிச்சிட்டேன்."

'ஜெய் சதீஸ்'னு எங்க பேரன்ஸ் வச்ச பேர மாத்தி சினிமாவுல 'ஆகாஷ்'னு பேரு வச்சது பாலச்சந்தர் சார்தான்.

*கேள்வி: சினிமாவுக்குள் நுழைவது குறித்து உங்கள் பெற்றோர்களின் கருத்து என்னவாக இருந்தது?*


"எனது விருப்பத்துக்கு அப்பா உடனே சம்மதிச்சிட்டார். ஆனால், அம்மா சம்மதிக்கல. "உனக்கேண்டா இந்த ஆசை. நீ நல்லா படிச்சிருக்கே. நல்ல வேலை பார்க்கிறே. இப்படியிருக்கும்போது வீணாக சினிமாவில் நுழைஞ்சு அவஸ்தைப் படாதே" அப்பிடீன்னாங்க.

"ஆனா நான் விடாப்பிடியாக நின்னு அம்மாவையும் சம்மதிக்க வைச்சிட்டேன்.

"சரி நீ ரொம்மவும் ஆசைப்படுற ஒரேயொரு படத்தில் மட்டும் நடிச்சிட்டு பேசாம வந்திடு" என்றார். பிறகு அப்படியே சினிமாவுக்குள் முழுமையாக என்ன ஈடுபடுத்திட்டேன். இப்போது பெற்றோர் என்ன நினைச்சு நல்ல சந்தோஷப்படுறாங்க."

*கேள்வி: தெலுங்கு மொழிப் படங்களுக்குள்....?*

"ரோஜாவனத்தைப் பார்த்ததும் அதில் நான் ரொம்ப நல்லா பண்ணியிருந்தேன்னு சொல்லி ஹைதராபாத்தில் இருக்கிற பிரபல தயாரிப்பு நிறுவன ஓனர் 'ராமூஜிராவ்' என்னை அழைத்து 'ஆனந்தம்' என்கின்ற தெலுங்கு படத்தில் நடிக்கவைத்தார். 'ஆனந்தம்' மிகுந்த வெற்றியாக அமைந்தது. 275 நாள்களுக்கு மேல் ஓடியது. கோடி கோடியாக வசூலானது. 'ஆனந்தம்' படம் 2002 ஆம் ஆண்டுக்கான சிறந்த தெலுங்கு மொழிப்படமாகத் தெரிவுசெய்யப்பட்டிச்சு. தெலுங்கில் சிறந்த நடிகனாகவும் நான் தெரிவுசெய்யப்பட்டேன்.




ராமகிருஷ்ணாவாக....

அதற்கான விருதுபெற்றதை மறக்கவே முடியாதுங்க. அதோட தெலுங்கில நல்ல வரவேற்பு கிடைச்சுது. இதுவரைக்கும் தெலுங்கில் 15 படங்களுக்கு மேல் கதாநாயகனாக நடித்திருக்கிறேன்."

*கேள்வி: தமிழ் சினிமாவில் தொடர்ந்து சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லையா?*

"கிடைச்சுது. 'ரோஜாக்கூட்டம்' அப்போது நான் தெலுங்கில ரொம்ப பிஸியாக இருந்ததால தமிழில நல்லா பண்ண முடியல. பின்னாடி 'ஆனந்தம்' தெலுங்கு படத்த தமிழில மொழிபெயர்த்து 'இனிது இனிது காதல் இனிது' என்ற பேர்ல எடுத்தாங்க. அதிலையும் நான்தான் ஹீரோ.



'இனிது இனிது காதல் இனிது' படத்தில்....

"அப்புறம் 'த்ரீரோஸஸ்' படத்தில லைலாவோட ஒரு 'டான்ஸ்' பண்ணித்தரச் சொன்னாங்க. அதில தயாரிப்பாளரா இருந்த ரம்பாதான் என்னைக் கேட்டாங்க. பண்ணிக்கொடுத்திட்டேன்.

"இப்போது 'ராமகிருஷ்ணா' என்ற படத்தில் ஹீரோவாக பண்ணியிருக்கேன். அகத்தியன் டைரக்ட் பண்ணியிருக்கிறார். தேவா இசையமைத்திருக்கிறார். விரைவில் அந்தப் படம் வர இருக்கிறது. தமிழ் சினிமாவுல இதுவரைக்கும் இவ்வளவுதான். இனி நிறையப் பண்ணனும்ணு ஆவலா இருக்கேன்."

*கேள்வி: ராமகிருஷ்ணா பற்றி...?*

"வித்தியாசமான கதை. இளைஞனான ராமகிருஷ்ணாவுக்குச் சொத்து ஏராளம் 'ஜொலிரைப்' அவனது அம்மா மட்டுதான் உறவு. அம்மா செத்ததுக்கப்புறம் ராமகிருஷ்ணா தனித்துப் போயிடுறான். அவனது வாழ்க்கையில் ஏற்படுகின்ற பல்வேறு சம்பவங்கள், திருப்பங்கள்.

"லைவ்ல காசு பணம் முக்கியமில்லை. மனித உறவுகள், சொந்தங்கள்தான் முக்கியம் என்பதைச் சொல்ற படம்.

காமெடி, செண்டிமெண்ட், துடுக்குத்தனம், அப்புறம்... சோகம் எல்லாமே இதில இருக்கு. நிறைய எதிர்பார்த்திருக்கிறேன். திருப்தியாகப் பண்ணியிருக்கிறேன். அஜித்தின் 'காதல் கோட்டை', 'வான்மதி' போன்ற வெற்றிப்படங்களை இயக்கிய அகத்தியன் இயக்குகிறார். 'மியூசிக்' தேவா.

"ஆகாஷ்கிட்ட இருக்கிற சகல திறமைகளையும் வெளிக்கொணர்ந்து தமிழ்சினிமாவில நல்ல ஹீரோவா நிலைப்படுத்தக்கூடியதாக 'ராமகிருஷ்ணா' இருக்கும்ணு உறுதியா நம்புறேன். இதுக்கப்புறம் கடவுளுடைய கையில்தான் எனது வெற்றி என்று கூறிவிட்டுச் சிரிக்கிறார்...

"என்னைப் பொறுத்தவரைக்கும் 'ராமகிருஷ்ணா' திருப்தியா பண்ணியிருக்கேன். ரசிகர்கள் அதை ஏத்துக்கிறாங்களா என்பதைப் பொறுத்தே அதன் வெற்றி தங்கியிருக்கு" - என்றார் ஆகாஷ்.

"ராமகிருஷ்ணா வெற்றிப்படமாக அமையவேண்டும் என்று 'உதயன்' சார்பாக வாழ்த்துக்களைக் கூறினேன்.

"ரொம்ப தாங்ஸ்மா, கேக்கிறதுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு" என்றார்.

*கேள்வி: உங்களுடைய படங்களை ரசிகர்களுடன் தியேட்டரில் அமர்ந்திருந்து பார்த்த அனுபவங்கள்...?*

"பெரும்பாலும் என்னோட படங்கள் 'ரிலீஸ்' ஆன அன்றே முதலாவது 'ஷோ' பார்த்திடுவேன். அங்கு ரசிகர்களின் கைதட்டல்கள் பாராட்டுகளைப் பார்த்ததும் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கும். "ரிலீஸ் ஆகிய அன்றைக்கு கோயிலுக்கும் போயிட்டுத்தான் தியேட்டருக்குப் போவேன்."



தன்னைத் திரைக்கு அறிமுகப்படுத்திய தயாரிப்பாளர் சுபாசினியுடன் தனது விருதினைப் பகிர்ந்துகொள்கிறார்.

*கேள்வி: யாழ்ப்பாணத்தில் படம் பார்த்த அனுபவம் பற்றி...?*

"சுன்னாகத்தில் விக்ரம் நடிச்ச 'அருள்' படம் பார்க்கப்போயிருந்தேன்.

"இந்தியாவில தியேட்டர்ல இருக்கிற வசதி இங்க இல்ல. ஆனா படம் ரொம்ப நல்லா வசூலாயிட்டிருக்கு. ரசிகர்கள் என்னை அடையாளம் கண்டிட்டாங்க. அவங்களோட சிறிது நேரம் பேசிட்டுத்தான் வீட்டுக்கு வந்தேன்." - என்றார்.

"உங்களது நேரத்தில் ஒருசில மணித்தியாலங்கள் எங்களுடன் செலவழித்ததற்கு மிக்க நன்றி" என்று கூறி விடைபெற்றோம்.

மலர்ந்த முகத்துடன் 'மீண்டும் சந்தியுங்க' என்றுகூறி வழியனுப்பினார். ✪

உதயன்

## இந்த மாற்றம் காலத்தின் கட்டாயம்

புதிய அரசை அமைத்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரும் தங்கள் அரசைத் தக்க வைத்துக்கொள்வதற்காகவும், தேர்தல் காலத்தில் தாங்கள் வழங்கிய வாக்குறுதிகளிலிருந்து உடனடியாக விலக முடியாது என்ற நிர்ப்பந்தத்தினாலும் சில 'கசப்பு மாத்திரைகளை' விழுங்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசு, விடுதலைப் புலிகளோடு சமாதான முயற்சிகளை ஆரம்பித்தபோது அதனைக் கடுமையாக - மிகக் கடுமையாக - சாடியவர் ஜனாதிபதி.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விமர்சித்தார். அதன் கீழான யுத்தநிறுத்த ஏற்பாடுகளைக் குறை கூறினார். யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்படும் முறையைக் கண்டித்தார். அனுசரணைப் பணியாற்றிய நோர்வேயை அவதூறு செய்தார். தீர்வுக்கு அடிப்படையாக உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி முறைக்கு அப்போதைய அரசும் புலிகளும் இணங்கியதைக் கேலி செய்தார். உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி அமைப்பு என்ற விடயம் அரசியல் அகராதியிலேயே இல்லாத விடயம் என்றார். விடுதலைப் புலிகளை ஈழத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்கமுடியாது என முழங்கினார். விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனை கருத்துக்கு எடுக்கமுடியாதது என அடித்துக் கூறி நிராகரித்தார்.

ஆனால், இப்போது எல்லாமே தலைகீழ்.

முன்னைய அரசிடமிருந்து பாதுகாப்பு அமைச்சைத் தான்தோன்றித்தனமாக அவர் பறித்தெடுத்த நாள் முதல், யுத்தநிறுத்த உடன்பாட்டை மீறிப் புலிகள் நடந்துகொள்வதாகவோ, குரங்குபாஞ்சான் முகாம் போன்ற முகாம்களை அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அமைக்கின்றார்கள் என்றோ குற்றச்சாட்டுக்களை அவர் கிளப்பவில்லை.

கடல் வழியாகப் புலிகள் ஆயுதங்களைக் கடத்துகின்றார்கள், சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கின்றார்கள் என்று நீலிக்கண்ணீர் வடிப்பதும் நின்றுவிட்டது.

அவரது தரப்பிலிருந்து வேறு புதிய கருத்து இப்போது வருகின்றது; புதிய போக்குத் தென்படுகின்றது.

விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை என்கிறார் ஜனாதிபதியின் வலது கரமாகச் செயற்படும் அவரது வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

முன்னைய அரசு விட்ட இடத்திலிருந்து பேச்சுகளை - அதே ஒழுங்கு' முறையில் - தொடங்குவதற்குத் தயார் என்றும் புதிய அரசுத் தரப்பிலிருந்து புலிகளுக்குக் கோடி காட்டப்பட்டிருப்பதாகத் தகவல்.

அது உண்மையானால் -

புலிகளைத் தமிழர்களின் ஏகப்பிதிநிதிகளாக மட்டுமல்ல, பேச்சுக்களில் சம பங்காளிகளாகக் கருதி, கௌரவத்துடன் - அவர்களுக்கு சம அந்தஸ்து வழங்கி - பேச்சு நடத்த அரசு தயார்.

அது மட்டுமல்ல, வேறு தரப்புக்களை இழுக்காமல் நேரடியாகப் புலிகளுடன் பேசி இணக்கத் தீர்வை எட்டவும் அரசுத் தரப்பு ஆயத்தம் என்று அர்த்தம்.

முன்னர் தாம் குறைகூறிய யுத்தநிறுத்த உடன்பாட்டை இப்போது அப்படியே ஏற்றுப் பேணி, முன்னர் தான் மோசமாக விமர்சித்த நோர்வேயையே மீண்டும் அனுசரணைப். பணிக்கு அழைத்து, புலிகள் மீதான கடும் விமர்சனங்களைத் தவிர்த்து, அமைதி முயற்சிகளுக்கான சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த முயல்கின்றார் ஜனாதிபதி.

இது, தம்மீது சுமத்தப்பட்ட காலத்தின் கட்டாயத்தை உணர்ந்து அவர் செயற்படுவதன் வெளிப்பாடு.

அதுவும் பேரினவாதிகளைத் தமது சிறுபான்மை அரசின் பங்காளிக் கட்சிகளாக வைத்துக்கொண்டு, தாம் இதுவரை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய - பேரினவாதப்பிரசாரத்தை முன்னெடுக்கும் - ஊடக வலையமைப்பைப் புறம் ஒதுக்கிவிட்டு - மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய அவற்றின் விமர்சனங்களைப் பொருட்படுத்தாது - ஆரோக்கியமான திசையை நோக்கி நகர முயல்கின்றார் ஜனாதிபதி.

இந்தப்போக்கில் அவர் தொடர்வாரா, அதில் நின்று நிலைத்து வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு அவருக்கு உண்டா என்பதெல்லாம் வேறு விடயம். இத்துணை திருந்தும் போக்கு ஏற்பட்டதற்காக அவரைப் பாராட்டலாம்.

ஆனால், அது எத்தனை நாளைக்கு? மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறாமல் இருக்குமா? - இவைதான் மனதை அரிக்கும் சந்தேகங்களாகும்.

# நெதர்லாந்தில் தமிழ் உணர்வு பொங்க ஈழத்தமிழர்கள் மேதினப் பேரணி

ரொத்தர்டாம்,மே5

நெதர்லாந்தில் முதன்முறையாக இவவருடம் அனைத்துச் சமூகங்களுடனும் இணைந்து தமிழீழத் தேசியத்தின் உணர்வலைகளைச் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துமுகமாக மேதினப் பேரணி நடத்தப்பட்டது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் கலந்துகொண்டிருந்தனர். உலகப் புகழ் பெற்ற சாவதேச துறைமுகத்தைக் கொண்டிருக்கும் ரொத்தர்டாம் நகரில் செயலகத்திற்கு முன்பருந்து மே முதலாம் திகதி, மதியம் 1.30மணியளவில் ஊர்வலம் ஆரம்பமாகி முடிவிடத்தை பிற்பகல் 3மணிக்குச் சென்றடைந்தது.

தவில், நாதஸ்வரம் முழங்க தமிழீழத் தேசியக் கொடிகளுடன் தேசியத் தலைவரின் உருவப்படங்களையும் தமிழினத்தின் உணர்வலைகளைப் பிரதிபலிக்கும் பதாகைகளையும தாங்கிய வண்ணம் தமிழ்மக்கள் தங்களின் தமிழீழத் தேசியத்தின் உணர்வுகளை வெளிப்படுத்தியவாறு சென்றனர். நெதர்லாந்து மொழியில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் வெளிபிடப்பட்ட "நாங்கள் எங்கள் வீடுகளுக்குப் போக ஸ்ரீலங்கா இராணுவமே நீங்கள் உங்கள் வீடுகளுக்குப் போங்கள்" என்ற துண்டுப் பிசுரமும் இங்கு விநியோகிக்கப்பட்டன. ஊர்வலத்தின் முடிவில் அனைத்துச் சமூகங்களின் பிரதிநிதிகளும் தங்களின் உரைகளை வழங்கினர். அங்கு திரண்டிருந்த தமிழ் மக்களின் சார்பில் பரப்புரைப் பொறுப்பாளர் மனோ, நெதர்லாந்து மொழியில் தமிழினத்தின் உணர்வலைகளைத் தனது உரையில் வெளிப்படுத்தினார். மேலும் அங்கு திரண்டிருந்த தமிழ்மக்களிற்குக் குளிர்பானங்களும் வழங்கபட்டன.

இதேவேளை -

இரவு 7 மணியிலிருந்து நள்ளிரவுவரை அனைத்துச் சமூகங்களின் மேதின கலைநிகழ்வுகளும் அரங்கொன்றில் நடைபெற்றன. இதில் குர்டிஸ்தான், பிரேசிலியன், இடதுசாரி நெதர்லாந்தவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. தமிழ் மக்களின் சார்பில் "தமிழே வாழ்க...." என்ற எழுச்சிப் பாடலிறகு தமிழீழத் தேசியக்கொடியைத் தாங்கிய வண்ணம் பரத நாட்டிய அபிநய நட்னம் இடம்பெற்றது.

(ஐ)

# தொண்டைமானாறு பாலத்தில் தடுப்புக் கதவு நிறுவ முடிவு

யாழ்ப்பாணம்,மே5

தொண்டைமானாறு பாலத்திற்கு மிக விரைவில் துரிசுக் கதவு அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற தொண்டைமானாறு தடுப்பணையைப் புனரமைப்பது பற்றிய ஆய்வறிக்கை தொடர்பான கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

நரைப் பேணுவதற்கும் அதனை உரிய அளவில் வெளியேற்றுவதற்கும் வசதியாகவே இந்தக் கதவு அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பொருளியல்துறைத் தலைவர் பி.சிவநாதன், கலாநிதி சூசை ஆனந்தன், பேராசிரியர் என்.சண்முகலிங்கன், ஆய்வறிக்கைக் குழுத் தலைவர் எந்திரி வி.பரமநாதன், விடுதலைப் புலிகளின் அபிவிருத்திச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் சி.கு.தூயவன், செயலக 'நியாப்' திட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.பாலகிருஷ்ணன் மற்றும் விவசாய, கமநல சேவை நீர்ப்பாசனத் திணைக்கள உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

தொண்டைமானாறு தடுப்பணை புனரமைப்புத் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கை கலந்துரையாடலில் கலந்துகொண்டவர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனை உலக வங்கிக்கு அனுப்பிவைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், நிலத்தடி நீர் மாசுபடல், நன்னீர் உவர்நீராக மாறுதல் மற்றும் சூழல் மாசடைதல் போன்றவை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்கும், கண்காணிப்பதற்குமாக மாவட்ட ரீதியான குழுக்களை நியமிப்பது என்றும் நேற்றைய கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-5-ரி)

# வடக்கு-கிழக்கை அபிவிருத்தி செய்வதாக சில வெளிநாட்டு நிறுவனங்கள் பிரசாரம்

## ஆனால் இங்கு எதுவும் நடப்பதில்லை என்கிறார் தூயவன்

யாழ்ப்பாணம்,மே6

வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்வதாகக் கூறி வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் பிரசாரம் செய்கின்றனவே தவிர மக்களுக்குப் பிரயோசனமான திட்டங்கள் எதனையும் அவை முழுமையாக நிறைவேற்றவில்லை.

- இவ்வாறு குற்றஞ்சாட்டினார் புலிகளின் அபிவிருத்திச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் சி.கு.தூயவன்.

நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற தொண்டமனாறு தடுப்பணைப் புனரமைப்பு பற்றிய ஆய்வறிக்கைக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே தூயவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

யாழ். மாவட்டத்தைப் புனரமைப்பதற்குப் பல்வேறுபட்ட சர்வதேச நிதி நிறுவனங்கள் முன்வருகின்றன. ஆனால், இந்த மாவட்டத்தைப் பற்றிய பூரணமான ஆய்வறிக்கை ஒன்றை அந் நிறுவனங்களுக்குச் சமர்ப்பிக்க முடியாத சூழ்நிலை உள்ளதால் அவர்கள் தமது பணிகளை மேற்கொள்ளப் பின்னடிக்கின்றார்கள்.

எமது பிரதேசத்தைப் பற்றிய பூரண அறிவில்லாத பலர் கொழும்பிலிருந்து இந்த மாவட்டத்தைப் பற்றி ஆய்வு செய்து வருவது மிகவும் வேதனையளிக்கின்றது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற 'நியாப்பின்' கூட்டத்தின் போதும்கூட இந்த ஆய்வறிக்கையின் அடிப்படையில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன. அவற்றிலுள்ள சில குறைகள் பற்றி உலக வங்கியிடம் நாம் தெளிவாக எடுத்து விளக்கியுள்ளோம்.

எமது மாவட்டங்களில் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு சர்வதேச நிதிநிறுவனங்கள் முன்வந்திருக்கின்றபோதும் அவை பிரயோசனமற்ற வேலைகளையே மேற்கொள்கின்றன. தாங்கள் இங்கு வேலைத்திட்டங்களைச் செய்து முடிப்பதாகச் சர்வதேச நாடுகளுக்குக் காட்டி, அதன்மூலம் தமக்கு ஆதாயம் தேடமுறபடுகின்றன. இதற்கு முக்கிய காரணம் எமது மாவட்டங்கள் பற்றிய ஆய்வு அறிக்கை எம்மிடம் இல்லாமையே ஆகும்.

யாழ். குடாநாட்டைப் பொறுத்த வரை கடந்தகாலங்களில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலைகளினால இந்த மாவட்டத்தின் சூழல் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை. ஆனால், தற்போது ஓர் அமைதியான சூழல் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி எமது தேசத்தின் வளங்கள் பற்றிய முழுமையான ஆய்வைச் செய்வதற்குப் பல்கலைக்கழகச் சமூகம் உட்பட அனைத்துப் புத்திஜீவிகளும் முன்வரவேண்டும்.

இங்கு நடைபெற்ற யுத்த சூழ்நிலைக்கு அப்பால் வடக்கு-கிழக்கு மாகாணத்தை அழிப்பதற்குத் தென்னிலங்கை அரசியலில் ஆட்சிக்கு வந்த ஒவ்வோர் அரசும் முயற்சி மேற்கொண்டு வந்துள்ளன. தற்போதும் ஆட்சிப்பீடமேறியுள்ள அரசின் பங்காளிகளான ஜே.வி.பியினர் எமது பிரதேசங்களில் மேற்கொள்ளும் அபிவிருத்திகளைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

எமது பகுதியிலுள்ள பல நிதி நிறுவனங்கள் எம்முடன் இணைந்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்வந்துள்ளன. அவற்றை நாம் வரவேற்கின்றோம். எந்த நிறுவனமாக இருந்தாலும் உதவி செய்யவிரும்பினால் அதனை முழுமையாகச் செய்யவேண்டும். இல்லாதுவிட்டால் தி[illegible]களைச் செயற்படுத்தாமல் விடுவது நல்லது. - இவ்வாறு தெரிவித்தார். ([illegible]

# இந்திய மருந்து வகைகளில் ஒன்றைப் பயன்படுத்தத் தடை

வலி.தென்மேற்கு,மே5

ஆஸ்பத்திரிகளில் தற்சமயம் பயன்படுத்தப்பட்டுவரும் இந்தியத் தயாரிப்பான மருந்துக்குளிகை ஒன்றின் பாவனையை உடனடியாக நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அரச வைத்தியசாலையில் பயன்படுத்தப்பட்டு வரும் - 2006 ஆம் ஆண்டில் காலாவதியாகும் என்று குறிப்பிட்டுள்ள - இந்திய நிறுவனம் ஒன்றின உற்பத்தியான - 'Prochlorperazine' என்ற மருந்துக்குளிகையின் பாவனையையே உடன் நிறுத்துமாறு கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவின் பணிப்பாளர் சுற்றறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

நாட்டிலுள்ள சகல அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்ட இச்சுற்றறிக்கை கடந்த வாரம் யாழ்மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கும் கிடைத்தது.

பிரிட்டிஷ் பாமகோப்பியாவுககு அமைவாக இந்த மருந்துக்குளிகை தயாரிக்கப்படவில்லை என்று ஆய்வுப்பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டதை அடுத்தே இதன் பாவனையை உடன்நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

### நாளை

சித்திரை 24
வியாழக்கிழமை
(06.05.2004)
திதி : துதியை
இரவு 9.58 வரை
நட்சத்திரம்: அனுசம்
இரவு 10.10 வரை
சுபநேரம்: 7.25 - 8.55
ராகுகாலம்: 1.25 - 2.55
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உங்கள் எதிரி ஓர் எறும்பு போல இருந்தாலும் அவனை ஒரு யானை போல கருதுங்கள்.

## கைத்தொழில் அதிகார சபையின்

# எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார ச[illegible] (கட்டுநாயக்கா) எந்திரவியல் விஞ்ஞான தேசிய டிப்[illegible] பாடநெறிக்கு (என்.டி.ஈ.எஸ்.) பொருத்தமானவர்களிட[illegible] விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2004ஆம் கல்வியாண்டில் எந்திரவியல் சிறப்புப் பயி[illegible]ளையே இவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யவுள்ளது.

விண்ணப்பதாரர் ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் தூய, [illegible] மற்றும் பிரயோக கணிதங்களில் சித்தியடைந்து இருப்ப[illegible] ஜீ.சீ.ஈ சாதாரண தரத்தில் 3 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்[illegible] சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் எழுத்துப் பரீட்சை மூலம் தாம் பெறும் புள்ளித் திட்டத்துக்கு ஏற்ப -

★ குடிசார் எந்திரவியல்
★ மின் எந்திரவியல்
★ பொறிமுறை எந்திரவியல்

ஆகிய கற்கை நெறிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

ஆங்கில மொழிமூலம் இடம்பெறும் கற்கைநெறி தொடர்ந்து 4 வருடங்களுக்கு இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பப்படிவங்களைத் "தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (வடமாகாணம்), இல. 07, கோவில்வீதி, யாழ்ப்பாணம்" என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

(8-185)

# சேதமடைந்த 1,500 ஆலயங்களை புனரமைப்பதற்கு ஏற்பாடுகள்

மாத்தளை,மே5

நாட்டின் தற்போதைய அமைதிச் சூழலைப் பயன்படுத்தி யுத்தத்தால் சேதமாக்கப்பட்ட 1,500 இந்து ஆலயங்களைப் புனரமைக்க இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம நடவடிக்கை எடுத்துள்ளது.

திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் வீ.குமார்வடிவேல் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாத்தளை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய கல்யாண மண்டபத்தில் இடம்பெற்ற உமாபதிச்சிவாச்சாரியார் குருபூசைத் தின விழாவில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்துசமய கலாசார அலுவல்கள திணைக்களத்தின் சுமார் 1,500 சேதமடைந்த இந்து ஆலயங்களும் 1,500 அறநெறிப்பாடசாலைகளும் மற்றும் 3,000 இந்து அமைப்புக்களும் பதிவாகியுள்ளன. இவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாக நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களுக்கும் 25 கலாசார உத்தியோகத்தர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. கடந்த மார்ச் 12இல் நேர்முகப்பரீட்சை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த போதும் தேர்தல் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இதற்கான நியமனங்களை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு இந்து சமய விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது - என்றும் அவர் குறிப்பிட்டார்.

கம்பவாரிதி இ.ஜெயராஜ், ஆலய அறங்காவலர் சபைத்தலைவர் த.மாரிமுத்துச் செட்டியார், ஆலய முகாமையாளர் ராஜ்சிவா, செயலாளர் து.சுந்தரவேற்பிள்ளை போன்றோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர். அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(ஐ-ரி)

## பாலியல் நோய்கள் தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே5

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும் கருத்தரங்கு ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்கத் தெருவில் அமைந்துள்ள நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் "பாலியல் நோய்களும் அதனை எதிர்கொள்ளும் வழிமுறைகளும்" என்ற தலைப்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் ஜி.பவானி கருத்துரை வழங்குவார்.

(ஐ-8-4)

# வீடு புகுந்து தாக்குதல்கள் குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மே5

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலங்களாக வீடு புகுந்து குழுக்களினால் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகப் பொலீஸ் வட்டாரங்களின் தகவல்கள் மற்றும் வைத்தியசாலை விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

அண்மைக் காலங்களாக இடம்பெற்றுவரும் இவ்வாறான தாக்குதல்களில் பலர் கத்திவெட்டுக்கும், கொட்டன் அடிக்கும் இலக்காகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதுடன அவர்களில் சிலருக்கு உடல் அங்கங்களில் பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இதுபோன்ற சம்பவங்கள் கடந்த சனிக்கிழமையும் இடம்பெற்றுள்ளன.

கடந்த சனிக்கிழமை இருவேறு இடங்களில் இடம்பெற்ற கொட்டன் தாக்குதலில் இரு பெண்கள் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

அல்லைப்பிட்டி, கொய்யாத்தோட்டம் போன்ற பகுதிகளிலேயே இந்தச சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பா.சறோஜாதேவி (வயது 28), வே.ரகுலா (வயது 26) ஆகிய பெண்கள் இருவருமே இளைஞர் குழு ஒன்றினால் தாக்கப்பட்டுள்ளனர்.

இதே தினத்தில் புதிய வீதி, கொய்யாத்தோட்டத்தில் ரி.குணரட்ணம் (வயது67) என்ற வயோதிபர் இளைஞர் குழுவின் தாக்குதலுக்கு இலக்கானார். திருடுவதற்காக அந்த வயோதிபரின் வீட்டிற்குச் சென்ற சிலரே இவரைத் தாக்கியதாகத் கூறப்படுகிறது.

இதேவேளை -

கைதடியில் இடம்பெற்ற மோதலொன்றின்போது இளைஞர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இந்த மோதலில் தொடர்பில்லாத பி.உதயகுமார் (வயது26) என்பவரே வீதியில் வரும்போது வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக யாழ். போதன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-8-ஸ்ரீ)

## யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பப் பாடசாலைக்கு புதிய மேற்பார்வையாளர்

வட்டு-யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை மேற்பார்வையாளராக வணிகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் வண.பிதா ஜி.நடராஜா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வண.பிதா ஜி.நடராஜா உதயதாரகை பத்திரிகையின் முகாமையாளராகப் பேராயர் எஸ். ஜெபநேசனால் முன்னர் நியமிக்கப்பட்டார். என்பது குறிப்பிடத்தக்கது. (8-185)

## கல்வியியற் கல்லூரி ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே5

வட மாகாண தமிழ்த்தேசிய கல்வியியற்கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை காலை 10மணிக்கு ஆரியகுளச்சந்தியில் உள்ள புதிய உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்புத் தொடர்பான விடயங்கள், புதிய ஆசிரியர் நியமனம் தொடர்பான விடயங்கள் என்பன ஆராயப்படவுள்ளன. (8-ரி)

# இலங்கைச் சிறுவர் மீதான துஷ்பிரயோகம்: பிரிட்டிஷ் பிரஜை குற்றவாளியெனத் தீர்ப்பு

கொழும்பு,மே5

இலங்கைச் சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்திய பிரிட்டிஷ் பிரஜை ஒருவர் குற்றவாளி என பிரிட்டிஷ் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

கடந்த 2002ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த பிரிட்டிஷ் பிரஜை சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்பது தெரியவந்துள்ளது.

அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திரசில்வா தகவல் தருகையில் அதிகாரிகள் பலரும் நீதிமன்றில் சாட்சியமளிப்பார்கள் எனத் தெரிவித்தார்(8-9-12)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 - 08 - 1942



உதிர்வு 17 - 04 - 2003

திருமதி வீரசிங்கம் அருள்மலர்

திதி: 05-05-2004

ஓராண்டல்ல எத்தனை
ஆண்டுகள் சென்றாலும்
நினைவுகள் தூங்காது தொடரும்...!

ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

நாகம்மாள் கோயில் வீதி,
உடுவில், சுன்னாகம். (31591) (26-21-14-18)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 07 – 04 – 1925



மறைவு 06 – 04 – 2004

திருமதி வள்ளியம்மை முருகேசு

அன்பும் பண்பும் ஆதரவும் அரவணைப்பும் நிறைந்த அன்னையே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறோம்.

எமது அன்புத் தெய்வமாம் அன்னையின் மறைவுச் செய்தி கேட்டு உடன்வந்து ஆறுதல் கூறி அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

நாளை (06.05.2004) வியாழக்கிழமை முற்பகல் 11.00மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொண்டு அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குளோபல் தொலைத்தொடர்பு நிலையம்.
பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (31589)(42-21-14-18)

மு.ஆனந்தசிவம்
குடும்பத்தினர்.

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

HAPPY BIRTH DAY

சந்திரமோகன் - பவானி
தம்பதிகளின்
செல்வப் புதல்வி

கம்ஷிகா



இன்று (05.05.2004) புதன்கிழமை பிறந்தநாள். அதனை 09.05.2004 ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா மற்றும் குமார் பெரியப்பா குடும்பம், நாகராசா பெரியப்பா குடும்பம், நவரத்தினப் பெரியப்பா குடும்பம், பாலுபெரியப்பா குடும்பம், கந்தசாமி பெரியப்பா குடும்பம் மற்றும் கலைச்செல்வன் மாமா குடும்பம், திருநாவுக்கரசு மாமா குடும்பம், பாஸ்கரன் மாமா குடும்பம், பாக்கியநாதன் மாமா குடும்பம் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் சிட்டிவேரம் (சுட்டிபுரம்) கண்ணகை அம்மன் அருள்பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகிறார்கள் .

பருத்தித்துறைவீதி.
கொடிகாமம். (C/34831)(40-21-14-18)

தகவல்:
அப்பா, அம்மா.

உ
கணபதி துணை

## உபநயன அழைப்பு

அன்புடையீர்,

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான தாரண வருஷம் சித்திரைத் திங்கள் 24ஆம் நாள் (06-05-2004) வியாழக்கிழமை அஷ்வினி நட்சத்திரமும் வளர் துவிதீயைத் திதியும் சித்தயோகமும் கூடிய காலை 7.00 மணி முதல் 8.50மணி வரை வரும் இடப லக்கின சுப முகூர்த்தத்தில் சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய குருபரம்பரையில் உதித்த

சுப்பிரமணியக் குருக்கள் நடராஜக் குருக்களின் பேரர்களும்
தாவடியூர் அம்பலவாண வேத விநாயகர் ஆலய பிரதம குருக்கள்
குமாரசாமிக் குருக்கள் பரமசிவக் குருக்களின் தாய்வழிப் பேரர்களும்
எமது புத்திரர்களுமாகிய



கிஷ்ணராம் ஸ்ரீராம்



ஆகிய இருவருக்கும்

நுணுவில் சிதம்பர விநாயகர் திருவருளுடன் எமதில்லத்தில்

யக்ஞோபவீதம் (பூனூல் தரிப்பித்து) பிரம்மோபதேசம் செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் சுற்ற மித்திர குடும்ப சகிதம் வருகைதந்து குமாரர்களை ஆசீர்வதித்து நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தீஷாகுரு: வேதாகம சோதிட பூஷணம், சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் அவர்கள்

தங்கள் நல்வரவை விரும்பும்:
ந.இராஜேஸ்வரக் குருக்கள் - சித்ரா

நுணுவில் பிள்ளையார் கோயில்,
சரசாலை, சாவகச்சேரி. (சி-34885)

(26-21-14-18)



நெதர்லாந்தில் வசிக்கும் ஈழத்தமிழர்கள் கடந்த மே தினத்தன்று தலைநகரில் பேரணி ஒன்றை நடத்தினர். தலைவர் பிரபாகரனின் படங்களையும் கொடிகளையும் தாங்கியவாறு தமிழ்ப்பண்பாட்டு அம்சங்களுடன் இந்த மே தினப் பேரணி அமைந்தது. அதிலிருந்து இரு காட்சிகள். (ஐ)

## சமாதானப் பேச்சுக்கு

# முன்நிபந்தனை ஏதும் புலிகள் விதிக்கவில்லை!

## கதிர்காமர் கூறுகின்றார்

கொழும்பு,மே5

"சமாதானப் பேச்சுக்கு விடுதலைப் புலிகள் முன்நிபந்தனை ஏதும் விதிக்கவில்லை".

- இப்படிக் கூறியிருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

'த ஹிண்டு' நாளிதழின் சகோதர இதழான 'புரொண்ட்லைன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

'த ஹிண்டு'வின் கொழும்புச் செய்தியாளர் வி.எஸ்.சம்பந்தனுக்குக் கடந்த வெள்ளிக்கிழமை - நோர்வே அனுசரணைக்குழுவினர் இலங்கை வருவதற்கு முதல்நாள் - அவர் அளித்த இந்தப் பேட்டியின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அடுத்த கட்டப் பேச்சுக்களின் ஆரம்பமாக 'மக்களின் அன்றாடப் பிரச்சினை' விவகாரமே அமையும்.

'கொள்கை அடிப்படையில் -மனோ உணர்வு நிலையில் நிச்சயம் அது தான் தொடக்கப்புள்ளி. மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை, மீள்கட்டுமானம் மற்றும் புனரமைப்பு ஆகியவைதான் அது' - என்றார் கதிர்காமர்.

புலிகள் பேச்சுக்கு முன்நிபந்தனைகளோடு வருவார்களா என்று கேட்டதற்கு -

"எங்களுக்கு அப்படி ஒன்றும் தெரியவில்லை. புலிகளிடமிருந்து எங்களுக்குத் தகவல்கள் வருகின்றன. ஆனால், அவை எவற்றிலும் முன் நிபந்தனைகள் குறித்துப் பிரஸ்தாபிக்கப்படவேயில்லை" - என்றார் அவர்.

"புலிகள் தான் மிக முக்கியமான தரப்பு, வடக்கு - கிழக்குக்காக எதேனும் செய்யவேண்டும் என்றால் அது புலிகளுடன் சேர்ந்துதான் என்று அர்த்தம். புலிகள் இல்லாமல் அல்ல. நான் கூறக்கூடிய அனைத்தும் இது தான்" - என்றும் கதிர்காமர் குறிப்பிட்டார்.

நோர்வே அனுசரணையாளர்களின் பங்குபணி பற்றிக் குறிப்பிட்ட கதிர்காமர், அதை 'மீள்வரையறை' செய்வதற்குச் 'சரியான சந்தர்ப்பம்' இதுதான் என்றார்.

'நேரடித் தோற்றப்பாட்டை குறைத்துக் கொள்வதற்கு' அனுசரணையாளர்களை அரசுத்தரப்பு 'ஊக்குவிக்கும்' - என்றும் அவர் கூறினார்.

'முன்னைய அரசு அவர்கள் மீது சூட்டிய உயர் தோற்றப்பாட்டுடன் கூடிய பங்களிப்பால், நேர்ந்த நோவு தரும் விபரீதங்களால் அவர்கள் பாதிக்கப்பட்டனர் - என்றும் கதிர்காமர் சுட்டிக்காட்டினார்.

புலிகள் மீதான தடையை விலக்கல், பொருளாதாரத் தடையை நீக்குதல் போன்ற - முன்னைய ஐ.தே.க. அரசு மேற்கொண்ட - நடவடிக்கைகளுக்கு மாறாக அவற்றை மாற்றும் போக்குக்கு இந்த அரசு போகாது - என்றும் அவர் குறிப்பிட்டார்.

'அது முன்னே கசிய ஒரு காவு. நாங்கள் இப்போது அதிலிருந்து நடக்க வேண்டும் நல்ல செயல்கள் புரியப்பட்டுள்ளன அவை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், இயலுமானால் அவற்றை மேலும் மேம்படுத்தவேண்டும்" என்றார் கதிர்காமர்

"வெளியில் இருந்து தீர்வு திணிக்கப்படுவதை முற்றாக எதிர்க்கிறோம்" - என்று கூறியே கதிர்காமர் 'ஒரு கூட்டு' மற்றும் 'அணைத்துப் போகும்' போக்கை அடுத்த சுற்றில் கடைப்பிடிப்பது பற்றியும் பிரஸ்தாபித்தார்.

"இந்த விடயங்களில் சட்டபூர்வமான சிரத்தையும், உரிமையும் உள்ளன என்று நாம் கருதும் சகல தரப்பினையும் இறுதித் தீர்வை எட்டும் சமயத்தில் உள்ளே கொண்டுவரத்தக்க விதத்தில் தற்போதைய கட்டமைப்பை மீளமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" என்றும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார்.

"ஜனாதிபதி முக்கிய பங்குவகிப்பார். ஆனால், அவர் பலரினதும் ஆலோசனையுடன்தான் செயற்படுவார்" - என்றார் கதிர்காமர்.

"எனவே பேச்சுக்கள், தங்களுக்குள் விடயங்களை அமுக்கிவைத்திருக்கும் ஒரு சிலரால் மட்டும் நடத்



தப்படமாட்டாது என்பதை வலியுறுத்துகிறேன்" - என்றார்.

கூட்டுக்குழு ஒன்றினால் பேச்சுக்களை முன்னெடுக்கும் (ஐ.தே.கட்சி அரசினால் பின்பற்றப்பட்ட) முறை குறித்துக் கருத்து வெளியிட்ட கதிர்காமர், அந்தக் 'குழு' முறை குறித்து அரசு மீள ஆலோசித்து வருவதாகச் சொன்னார்.

"சிரேஷ்ட பேச்சாளர், இரண்டாம் நிலைப் பேச்சாளர், மூன்றாம் நிலை பேச்சாளர் என உயர் தோற்றப்பாடு உடைய குழு ஒன்றை ஏற்படுத்தினால் அது இறுக்கமான கட்டமைப்பாகிவிடும். அது விரும்பத்தக்கதல்ல. எங்கள் அணுகுமுறை கூட்டிணைவு முறை அடிப்படையிலானதாக இருக்கும்' - என்றும் அவர் கூறினார்.(எ-க)

## கால்நடைகளுக்கான நடமாடும் வைத்திய சேவை

சாவகச்சேரி,மே5

சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரி பிரிவினர் வரணிப் பிரதேசத்தில் கால்நடைகளுக்கான நடமாடும் வைத்திய சேவை ஒன்றை நாளை நடத்தவுள்ளனர்.

இந்த நடமாடும் சேவை நாளை காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை வரணி இடைக்குறிச்சி கலாமன்றத்திற்கு முன்பாக நடைபெறும்.

வரணிப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தமது கால்நடைகளுக்கான பிரச்சினைகளையும் தேவையான அறிவுரைகளையும் பெற்றுக் கொள்ளுமாறு சாவகச்சேரி கால்நடை வைத்தியர் திருமதி சகுந்தலா மகேந்திரராசா தெரிவித்துள்ளார்.(ஐ-8-31)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

தென்மராட்சி,மே5

பளைப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களை அழிக்குமாறும், வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றுவதுடன் அவற்றுக்கு உரிமத்தகடும் வழங்குமாறும் தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவினர், பளைப் பிரதேச சபையினரைக் கோரியுள்ளனர்.

இதனையடுத்து இப்பகுதியில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணிகள் அடுத்தவாரம் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும், இவ்வேளையில் அப்பகுதி மக்கள், தமது வளர்ப்பு நாய்களைக் கட்டிவைத்திருக்குமாறும் பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர்.

வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## சாவகச்சேரி மக்கள் வங்கிக்குப் புதிய முகாமையாளர்

தென்மராட்சி,மே5

சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளராக யாழ். பிரதான வீதிக்கிளையில் கடமையாற்றிய எஸ்.சிவபாலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் கடமையாற்றிய க.பாலச்சந்திரன் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக்கிளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(ஐ-8-117)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்களுக்கு அபராதம்

சாவகச்சேரி,மே5

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரிப் பிரிவு எல்லைக்குட்பட்ட கைதடி வடக்குப் பிரதேசத்தில் இலங்கை மின்சார சபை ஊழியர்களும் சாவகச்சேரிப் பொலீஸாரும் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனை நடவடிக்கையின்போது சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்ற இருவர் வசமாக அகப்பட்டனர்.

இப்பரிசோதனையின்போது கைதடி கமநல வீதியைச் சேர்ந்த வேலன் இராசேந்திரன், உதயநகர் வீதியைச் சேர்ந்த வேலு மோகனதாஸ் ஆகிய இருவருமே அகப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர்.

பதில் நீதிபதி சி.பாலகிருஷ்ணன் இருவரையும் தலா 3 ஆயிரம் ரூபா காசுப் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் எதிர்வரும் ஜூன் மாதம் 18ஆம் திகதிவரை தினமும் காலை 8மணிக்கும் மாலை 4மணிக்கும் இடையில் நீதிமன்றில் ஒப்பமிடுமாறும் பணித்தார். (8-31-117)

## தென்மராட்சிப் பிரதேசத்தில்

# மீள்குடியேறிய 84 குடும்பங்களுக்கு தற்காலிகக் கொட்டில்கள் அமைப்பு!

தென்மராட்சி,மே5

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ, கைதடி நாவற்குழி, கோவிலாக்கண்டி ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள 84 குடும்பங்களுக்குத் தற்காலிக கொட்டில்கள் அடுத்த வாரம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் அமைத்துக்கொடுக்கப் படவுள்ளன.

யுத்த அனர்த்தங்களால் வீடுகளை முற்றாக இழந்த குடும்பங்களுக்கு தலா 25ஆயிரம் ரூபா பெறுமதியான தற்காலிகக் கொட்டில்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இதற்கென யாழ். செயலகத்தினால் முதல் கட்டமாகப் பத்து லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இப்பகுதியில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம் கூரை விரிப்புகளை வழங்கி வருகிறது. அவர்கள் 6 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் அல்லாத பண்டங்களை வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.(ஐ-117)

## மது உற்பத்தி நிறுவனங்களால் அரசுக்கு 38 கோடி ரூபா நஷ்டம்!

கொழும்பு,மே5

மதுபான வகைகளை உற்பத்தி செய்யும் சில நிறுவனங்கள், உற்பத்தி வரி செலுத்தத் தவறியுள்ளதால், 38 கோடி ரூபாய்களுக்கு அதிகமான தொகையை அரசு இழந்துள்ளதென அரச கணக்காய்வுத் திணைக்களத்தின் ஆய்வு அறிக்கை தெரிவித்துள்ளது.

மேற்படி நிறுவனங்கள், ஆரம்பம் முதலே உற்பத்தி வரி செலுத்தவில்லையெனவும், உற்பத்திவரி விதிமுறைகளுக்கமைய, அந்த நிறுவனங்கள் மூலம் 20கோடி ரூபாய்களுக்கு மேற்பட்ட வரிப் பணமும், அது தொடர்பான தண்டப் பணமாகச் சுமார் 18 கோடி ரூபாய்களும் அறவிடப்படவேண்டியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி வரித்தொகையினைச் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து உடனடியாக அறவிடுமாறு சுங்கத் திணைக்கள அதிகாரிகளை நிதி அமைச்சர் பணித்துள்ளார் என்றும் தெரியவருகிறது (ஐ-4-8)

## கள்ள நோட்டுக்களுடன் மதவாச்சியில் இருவர் கைது

கொழும்பு,மே5

பத்து ரூபா மற்றும் ஐந்நூறு ரூபா நோட்டுக்கள் அடங்கிய 72 ஆயிரம் ரூபா பெறுமதியான கள்ள நோட்டுக்களுடன் வவுனியா நோக்கிப் பயணித்த இரு நபர்கள் மதவாச்சியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனா என்று வவுனியாப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இந்த இருவரும் பல காலங்களாகவே வவுனியா, அநுராதபுரம், மட்டக்களப்பு, திருகோணமலை, பொலன்னறுவை, கற்றுவெல போன்ற பிரதேசங்களில் கள்ள நோட்டுக்களை மாற்றி வந்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்திருப்பதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் வவுனியா பிரதேசத்தில் கள்ள நோட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்து இது தொடர்பாகப் பொலீஸார் மேற்கொண்ட தீவிர விசாரணைகளின் பின்னரே பிரஸ்தாப நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-8-4)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

**Yamaha Mate - 50 YCLS** (NPGL XXXX) தனிப்பாவனையிலுள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 67/2, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (31609)

நல்ல நிலையில், டாக்டரின் பாவனையிலுள்ள **Honda Civic 15 - Full Option** கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: **Dr.P.** அச்சுதன், புத்தூர் சந்தி, மீசாலை கிழக்கு மீசாலை. **T.P.:** 0777 283757. (31605)

**Peugeot 404 Car, Lambratta Scootar** மற்றும் சணல் நல்லின ஆடுகள், இரண்டு வீடுடைத்த கற்கள், சிறிய கோழிக்கூடு, அலுமாரி, புதிய பற்றரி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **T.Kulasingam,** இல.7/1, நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (31629)

தரமான நம்பர் 1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும் 07.05.04 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, **T.P.:** 3529, 2867, **P.**ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (31621)

அச்சுவேலி தெற்கில், சிவசக்தி கோயிலுக்கு அண்மையில் காலியாகவுள்ள வீடு, வளவு உடன் விற்பனைகுண்டு. தொடர்புகளுக்கு: குமரையா நித்தியானந்தன் முரளி 0714 - 744943, நடராஜா 0712 - 515971 **(C-34894)**

கொடிகாமம், குட்ஸ்செட் **(Goods Shed)** ஒழுங்கையில் (புகையிரத நிலையத்திற்கு 100 யார்) 7 பரப்புக் காணியும், வீடும், 3 பரப்புக் காணியும கிணறும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- **Mrs.S.**பூபதி. தொ.பே.- 2512238. (சி-34893)

## மணமகள் தேவை

கொழும்பில் கம்பியூட்டர் என்ஜினியராகக் கடமையாற்றும் 30 வயது, அனுஷம் நட்சத்திரம் மணமகனுக்கு படித்த, அழகிய, பொருத்தமான மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல.2251. மே/பா உதயன். யாழ்ப்பாணம். (31613)

## மணமகன்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகம் பார்க்கும் 34 வயது திருவாதிரை 3ஆம் பாதம், 28 வயது பூசம் மணமகள்களுக்கு நற்குணமுள்ள மணமகன்களை (வெளியூர்/உள்ளூர்) எதிர்பார்க்கின்றனர். விளம்பர இல.2250 மே/பா உதயன். (31600)

## தவறிவிட்டது

கேரதீவு வீதி, நாவற்குழி, கைதடியைச் சேர்ந்த விஜயநாதன் பவளவசனி என்பவரது தேசிய அடையாள அட்டை (576480989V) மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் 28.04.2004 அன்று சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (31606)

திருகோணமலையைச் சேர்ந்த பழனியாண்டி பாலசுந்தரம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.823273100V) தவறிவிட்டது. A/L பரீட்சைக்குத் தோற்றவிருப்பதால் கண்டெடுத்தவர்கள் K.கிருபாகரன், திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். T.P.: 4590772. (31612)

மூளாயைச் சேர்ந்த கு.ரமணனின தேசிய அடையாள அட்டை (இல. 801592422V), தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம், வர்த்தக வங்கி **Cat Card**, ஒரு தொகைப் பணம் என்பன 04-05-2004 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஆறுமுகம் சிவானந்தம் சங்கரத்தை, வட்டுக்கோட்டை **YMHA**, சங்கரத்தை, வட்டுக்கோட்டை **(T.P.:** 222 5023) எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (31596)

## வீடு வாடகைக்குத் தேவை

இலங்கையில் முன்னணி வகிக்கும் நிறுவனமொன்றிற்கு நகரின் மத்தியில் அல்லது யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் வீடு உடன் வாடகைக்குத் தேவை. (கே.கே.எஸ். வீதி, கஸ்தூரியார் வீதி, நல்லூரை அண்டிய பகுதிகள் விரும்பத்தக்கது. தொடர்பு: 077 6110807 (31632)

## உடன் தேவை

**யாழ்.நகரில் இயங்கும் தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு ஆண், பெண் விற்பனையாளர், எழுதுநர், போட்டோப் பிரதி செய்பவர்கள் உடன் தேவை.**

**யாழ்.நகரிற்கு அண்மையில் இருப்பவர்களும் அனுபவம் உள்ளவர்களுக்கும் மட்டும் அனுமதி.**

தொடர்புகளுக்கு:

**யாழ்.போன் சொப்,**
**இல.10, நவீன சந்தை,**
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(C/34889) (26)

# புலோலியில் திருட்டுக்களைத் தடுக்க விழிப்புக் குழு


புலோலி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் கொள்ளைகள் திருட்டுக்களைத் தடுக்கும் நோக்குடன் பருத்தித்துறைப் பொலீஸாரின் அனுசரணையுடன் விழிப்புக்குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் அடுத்தடுத்து இரவு நேரம் நடைபெற்ற கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களைத் தொடர்ந்து புலோலி கிழக்குப் பகுதி நிரந்தரக் குடியிருப்பாளர்களும் இடம்பெயர்நது அங்கு வசிப்போரும் ஒன்றுசேர்ந்து கிராமசேவையாளர் இ.சுபேந்திரராஜா தலைமையில் புற்றளை மகாவித்தியாலயத்தில் ஒன்றுகூடி விழிப்புக் குழுவை அமைத்தனர்.

புலோலி கிழக்கு கிராமத்தைச் சுற்றியிருக்கும் மந்திகை - வல்லிபுரம வீதி, மந்திகை - கிராமக் கோட்டுச் சந்தி வீதி, உபயகதிர்காமம் - பல்லப்பை வீதி, கிராமக்கோட்டுச் சந்தி - பல்லப்பை வீதி ஆகியவற்றின் ஊடாகக் கிராமத்திற்குச் செல்லும் ஒழுங்கைகள், வீதிகளின் நுழைவாயில்களில இரவுவேளைகளில் காவல் பணிகளிலும் கிராமத்தின் மத்தியில் ரோந்து நடவடிக்கைகளிலும் இவ்விழிப்புக் குழுவினர் கடந்தவாரம் முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

இரவு 10மணிக்குப் பின்னர் இக் கிராமத்துக்குள் நுழைவோர் விசாரணை செய்யப்பட்ட பின்னரே உட்செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். விழிப்புக் குழுவின் செயற்பாட்டை அடுத்து இப்பகுதியில் கொள்ளைகள், திருட்டுக்கள் குறைந்துள்ளன.(ஜ-173)

# மரண அறிவித்தல்



## இரத்தினம் சிவசுந்தரரத்தினம்

(சுந்தரி - வர்த்தகர்)

"பி.பி.எஸ்.இல்லம்", யாழ்.வீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த இரத்தினம் சிவசுந்தரரத்தினம் (சுந்தரி) நேற்றுக் காலை அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா இரத்தினம், இரத்தினம் நேசரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும் பாஸ்கரியினது அன்புக் கணவரும், றஞ்சித், றஜித், றதீஸ் மற்றும் றஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இரத்தினம் சிவலிங்கரெத்தினம், செல்வி சிவலோகநாயகி, செல்வி சிவலோகபாஸ்கரி, திருமதி சிவலோக றஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 10 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*பி.பி.எஸ். இல்லம்,*
*யாழ்.வீதி, உடுவில்.* (…1-12-18)

**- குடும்பத்தவர்கள்.**

Jayoda **ஜயோதா**

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6184457 முதல் 6194025 வரை
சீட்டிழுப்பு இல. 29 திகதி 03-05-2004

வெற்றி எண்கள் **9 1 9 7 9 1** சுப்பர் எண் **6**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,85,00,050/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,85,00,050/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 07 | 50,000/- | 3,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 85 | 5,000/- | 4,25,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 828 | 500/- | 4,14,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,266 | 50/- | 4,13,300/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 81,947 | 10/- | 8,19,470/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 82 | 1,000/- | 82,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 827 | 100/- | 82,700/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,183 | 20/- | 1,63,660/- |
| மொத்தம் | 1,00,235 | | 37,95,130/- |

இந்த வியாழக்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்

ரூ. **1,87,29,950/-**

**6191824-5-49**
**6185251-8-03**
**6193735-9-90**
**6192197-0-44**
**6187693-6-24**

தென்மராட்சியில்

கணனி விற்பனை, சேவை நிலைய ஆரம்பம்



# easyPC System

*Computer Sales and Service Centre*

இன்று முதல் சாவகச்சேரி நகரில்

எமது கணனி விற்பனை மற்றும் சேவை நிலையம் ஆரம்பமாகின்றது.

உங்களுக்கான எமது சேவைகள் :

- கணனி, கணனி உதிரிகள் வழங்கல்
- கணனி அச்சுப் பதிப்பிற்கான Toner, Ribbon, Cartridge, Refill Kit
- கணனி வலைப்பின்னல் உருவாக்கம்
- கணனித் திருத்தச் சேவைகளும் பராமரிப்புக்களும்

212, Kandy Road,
Chavakachcheri. (C/31630)

**Telephone : 077 - 7229919**

# ஓராண்டு நினைவஞ்சலி



## செல்வன் நடனபாதம் திலக்ஷன்

(அத்தியார் இந்துக் கல்லூரி மாணவன்)

மண்ணில் மலரென **04-11-1997** விண்ணில் விதையென **17-04-2003**

திதி: பிரதமை 05.05.2004

**ஆண்டு ஒன்று மறைந்தாலும் ஆறவில்லை எம் துயரம்**
**எத்தனை உறவுகள் எமக்கு இருப்பினும்**
**உன்னைப் போலாகுமோ திலக்ஷா**
**கூடியிருந்து குதூகலிக்க வந்த நீ கூட்டை விட்டு**
**பறந்தது ஏன்? வாடுகின்றோம் உன் நினைவால்**
**வராயே மீண்டும் இன் ஒருக்கால் எம்மிடத்தே**
**இதயம் கனக்க விழிநீர் சிந்திட இறைவனை**
**வேண்டுகின்றோம் உன் ஆத்மா சாந்திக்கே**

(31623)(42)

*கோராலிவத்தை ஒழுங்கை,*
*நீர்வேலி மத்தி, நீர்வேலி.*

உமது பிரிவால் துயருறும்:
**தந்தை, தாய்,**
சகோதரிகள்: **பவிதா, யசோதா.**

# "ஆத்தா ஆடு வளர்த்தா கோழி வளர்த்தா...."

## அமைச்சர் கதிர்காமருக்கு கனடாவிலிருந்து ஒரு கடிதம்

அமைச்சர் கதிர்காமருக்கு!

உங்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கின்றது. அதாவது, உங்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா பிரதமர் பதவியைத் தராததைத்தான் சொல்கிறேன். கடந்த தடவை உங்களுக்குக் கடிதம் எழுதியபோது உங்களுக்கு இந்தக் கேவலமான நிலை வரும் என்று எச்சரித்திருந்தேன். சில வேளைகளில் நான் தமிழில் எழுதும் பழமொழிகள் உங்களுக்குப் புரியாமல் போனதோ என்னவோ.

இனிமேல் விடுதலைப் புலிகளுடன் வெளிநாடுகளில் வைத்துப் பேச்சுக்கள் நடத்தப்படமாட்டாது என்று வேறு கூறியுள்ளீர்கள். உண்மைதான் இனிமேல் எந்த முகத்தோடை நீங்கள் வெளிநாடுகளுக்குப் போவீர்கள். அதுவும் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று பரப்புரை செய்த நாடுகளில் வைத்து - புலிகளைத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று சொல்லி பேச்சுக்களை நடத்துறது என்றால் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும்.

A man who is his own lawyer a fool for his client.

அதாவது, எவன் தனக்குத்தானே வக்கீலாக வாதாடுகிறானோ, அந்த வக்கீலின் வாடிக்கையாளனுக்கு அவன் ஒரு முட்டாள். உடல் நலம் சரியில்லையென்றால் வைத்தியரிடம் போ. நானே மருத்துவம் பார்ப்பேன் என்றால் உனக்கு நீயே எமன். உங்களை நம்பியிருக்கும் அரசுக்கும், பேரினவாதிகளுக்கும் இது பொருந்தும்.

What Manchester says today – the rest of England says tomorrow.

மான்செஸ்ரர் நகரம் இன்று என்ன சொல்கின்றதோ அதை நாளை இங்கிலாந்து நாடே சொல்லும் என்பார்கள். புலிகளைப் பயங்கரவாதிகள் என்று அமெரிக்காவும் இங்கிலாந்தும் சொன்னால் உலகமே அவர்களைப் பயங்கரவாதிகள் என்று சொல்லும். ஒதுக்கும் என்று நினைத்தீர்கள். ஆனால், இன்று நோர்வேயும், ஜேர்மனியும், ஜப்பானும், தாய்லாந்தும், தென் அமெரிக்காவும், என்ன சொல்கின்றன என்று உங்களுக்கு நல்கு தெரியும் அதனால்தான் அந்த நாடுகளுக்குப் போய் புலிகளுடன் பேச்சுக்களை நடத்த உங்களுகக்கு வெட்கமாக இருக்கின்றது.

A rose called by any other name would smell as sweet.

ரோஜாப்பூவை என்ன பெயரில் அழைத்தாலும் அது மணம் பரப்புவது மாறாது. இதைத் தமிழில் இன்னொரு வகையில் - சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்பார்கள். நீங்கள் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று அழைத்தாலும் அவர்கள் தமிழர்களின் பிரதிநிதிகள் என்பதில் எதுவித மாற்றமும் ஏற்படப் போவதில்லை. இது உங்களுக்கும் உங்களைப் பிரதமர் பதவியில் இருத்த விரும்பிய ஜே.வி.பிக்கும் பொருந்தும்.

Who he laughs at scars never felt a wound.

'விழுந்து கூட அனுபவம் இல்லாதவன் விழுப்புண் பெற்றவனைப் பார்த்து வேடிக்கையாகச் சிரிப்பானாம்.' ஜே.வி.பியின் கதையும் இப்படித்தான். புரட்சிக்கும் கிளர்ச்சிக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் அவர்கள். ஜே.வி.பியும் முன்னர் ஆயுதம் தூக்கியவர்கள் தானே, புலிகளும் ஆயுதம் தூக்கியவர்கள்தானே. புலிகளுடன்

> "மாம்பழம் பழுத்தால் கிளிக்கு ஆகும். வேம்பு பழுத்தால் காக்கைக்குத்தான் ஆகும் என்று சொல்வார்கள். நீங்கள் என்னதான் பதவிகளை எடுத்தாலும் தமிழர்களுக்கு எதுவித பயனுமில்லை"
>
> "நீங்கள் என்னதான் சிங்களவர்களுக்கு உதவிகள் செய்தாலும் அவர்கள் உங்களை ஒரு கைத்தடியாக அல்லது கோடரிக்காம்பாக.................................................................."

பேசலாம் என்றால் ஏன் ஜே.வி.பியுடன் பேசக்கூடாது என்று கூறியுள்ளீர்கள். கசாப்புக்கடைக்காரனுக்கும், பட்டாளத்தானுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

ஜே.வி.பியை உள்ளே இழுத்ததல் உங்களுக்குப் பெரும் பங்கு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

Give a piper a penny, and two penny to leave off.

பொழுதுபோகவில்லை என்று வீதயில் போகும் பிடில்காரனை பத்து ரூபா கொடுத்து வாசிக்கச் சொன்னால் அவனைப் போகச்சொல்ல இருபது ரூபா கொடுக்க வேண்டிவரும். இதே போல்தான் ஜே.வி.பிக்கும் நீங்கள் கொடுக்கவேண்டிய விலை இன்னும் அதிகமாகவிருக்கும்.

If you buy the cow take the tail into the bargain.

மாட்டை விலை பேசும்போது வாலையும் சேர்த்துப் பேசு. ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்யும்போது அவர்களின் இனவாதக் கொள்கைகளையும் சேர்த்துத்தான் நீங்கள் ஒப்பந்தம் செய்தீர்கள் என்பதை மறவாதீர்கள். கடந்த தடவை ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு பின்னர் அவர்களைக் கழற்றிவிட்டது போல் இம்முறை கழற்றிவிடலாம் என்று மனப்பால் குடியாதீர்கள்.

lightning never strikes the same place twice.

இடி ஒரே இடத்தில் இரண்டு தடவைகள் விழுவதில்லை.

நீங்கள் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று நாடு நாடாகச் சென்று பிரசாரம் செய்தபோது அதனை 90 வீதமான சிங்களவர்கள் வரவேற்றனர். உங்களுக்கு ஒரு பௌத்த பிக்குகூட சிறுநீரகத்தைத் தானம் செய்தார். ஆனால் நீங்கள் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படுவதை அதே 90 வீத சிங்களவர்கள் வெறுத்தனர்; எதிர்த்தனர் என்பதை மறந்துவிடாதீர்கள்.

மாம்பழம் பழுத்தால் கிளிக்கு ஆகும். வேம்பு பழுத்தால் காக்கைக்குத்தான் ஆகும் என்று சொல்வார்கள். நீங்கள் என்னதான் பதவிகளைப் பெற்றாலும் அதனால் தமிழர்களுக்கு எதுவித பயனுமில்லை. அதுமட்டுமல்ல உங்களுக்கும்தான். நீங்கள் என்னதான் சிங்களவர்களுக்கு உதவிகள் செய்தாலும், அவர்கள் உங்களை ஒரு கைத்தடியாக அல்லது கோடரிக் காம்பாக - அதாவது தமிழர் என்ற மரத்தை வெட்டும் கோடரியின் பிடியாக, அந்த மரத்தின் கிளையிலிருந்து உருவான கோடரிப் பிடியாக மட்டுமே பாவிப்பார்கள் என்பது இதிலிருந்து வெளிச்சமாகின்றது.

நாய் பாருங்கோ எப்பவும் ஏதோ பெரிசாய் வெட்டிப் புடுங்குறமாதிரி ஓடிக்கொண்டே இருக்கும். ஓர் இடத்திலை நிற்காது. அந்த மாதிரி ஓடித் திரிஞ்சியள் நாடு நாடாய். இப்ப ஓர் இடத்திலை அம்மிக்கல் மாதி இருக்கிறியள். அதிலை உங்களுக்கு இதை ஆறுதலாய் சொல்ல முடிந்தது. கடைசியாய் ஒருவிடயம்:-

சந்திரிகா ஆத்தா, ஆடு வளர்த்தா கோழி வளர்த்தா. ஆனால், நாய் மட்டும் வளர்க்கவில்லை. ஏன் என்று உங்களுக்குத் தெரியும். ஆனாலும் பாருங்கோ - நாய் தன்னுடைய நாக்கைக் கடித்துவிட்டு, நாக்கிலிருந்து வரும் இரத்தத்தை ருசி பார்த்துக் கொண்டு - தனக்குப் போட்ட எலும் புத்துண்டிலை இருந்துதான் இரத்தம் வருகுது என்று நினைத்துக்கொண்டு, அந்த இரத்தத்தைச் சுவைத்துக் கொண்டேயிருக்கும். பேய் நாய்.

கடைசியாய் உங்களிடம் ஒரு விடயம். அண்ணன்தான் கூடப்பிறந்தான். அண்ணி கூடப்பிறந்தாளா? என்றொரு எச்சரிக்கைப் பழமொழி தமிழிலை இருக்கு.

கவனம் உங்களை இண்டைக்கு தமிழன் என்று சொல்லிப் பிரதமர் பதவி தர மறுத்த சிங்களவர், துரோகியென்று சொல்ல கனநாள் செல்லாது. ஏனென்றால் 'அயல் வீட்டான் பிள்ளை ஆபத்துக்குதவான்' என்று சிங்களவனுக்குத் தெரியும் உங்களுக்குத் தெரியாதுபோல. அந்த நேரத்திலை உங்களைப் பெத்தெடுத்த தமிழனும், தத்தெடுத்த சிங்களவனும் கைவிட - எள்ளோடு சேர்ந்த எலிப்புழுக்கை மாதிரி தூக்கியெறியப்படுவீர்கள்.

The evil that men do lives after them.

நங்கள் செய்யும் பாவங்கள், துரோகங்கள் நீங்கள் மரணித்த பின்னரும் உயிர்வாழும் என்பது ஆங்கிலப் பழமொழி. இது உண்மையோ பொய்யோ - ஒன்று மட்டும் உண்மை. தமிழரின் சரித்திரத்தில் எட்டப்பனும், காக்கை வன்னியனும் இன்னும் வாழ்கின்றனர்.

புரிந்தால் சரி.

இப்படிக்கு
வாசகன் ரட்ணதுரை
(கனடா)

# மாதவிடாய் பற்றி இன்னும் மூடநம்பிக்கைகள்...

குழந்தைகளை ஈன்றெடுத்து ஒரு நல்ல சமுதாயத்தினை உருவாக்குவதில் பெண் முக்கியமான ஸ்தானத்தை வகிக்கிறாள். இப்பெண்ணின் இனப்பெருக்க உறுப்புகளில் ஏற்படும் பாதிப்புகள், பெண்களை மட்டுமன்றி முழுச்சமுதாயத்திலும் தாக்கத்தினை விளைவிக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு பெண்ணும் தனது இனப்பெருக்க உறுப்புகளைப் பற்றியும் அவற்றில் ஏற்படும் நோய்கள், குணங்குறிகள் பற்றியும் அறிந்து வைத்திருத்தல் அப்பெண் ஒரு சுகதேகியாக வாழ வழிசமைக்கும். நமக்கு ஏற்படும் நோய்களுக்கான குணங்குறிகள் ஓரளவுக்கேனும் எமக்குத் தெரியுமாயின் நாம் உடனடியாக வைத்தியரை நாடி ஆலோசனை பெறுவதுடன் மூடநம்பிக்கைகளில் விடுபடவும் முடியும். இதனை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை வரையப்படுகின்றது.

மாதவிடாய் (Menstruation) ஏற்படும் ஒழுங்கீனங்கள் பற்றிப் பார்ப்பதன் முன்னர் ஒரு சுகதேகிப் பெண்ணில் ஏற்படும் மாதவிடாய் பற்றிப் பார்ப்போம்.

மாதவிடாய் என்றால் ஒவ்வொரு யுவதிக்கும், மூப்படைந்த பெண்ணுக்கும் இந்த அனுபவம் தவிர்க்க முடியாததொன்றாகும். இதனை மாதவிலக்கு, சூதகம் எனவும் பலவாறு அழைப்பர். மாதவிலக்கு எவ்வாறு நிகழ்கின்றதென்பதை எடுத்து நோக்கின், கபச்சுரப்பியினால் ஏற்படுத்தப்படும் உந்துதலினால் சூலகத்தில் உள்ள சூல் முற்றி வளர ஆரம்பிக்கும் மெதுவாக வளரும் சூல் முதிர்ச்சியடைந்து சூலகத்திலிருந்து விடுவிக்கப்படுகின்றது. இவ்வண்ணம் விடுவிக்கப்பட்ட சூல், பலோப்பியன் குழாய் ஊடாகச் செல்கிறது. அக்குழாயினூடாகச் செல்லுகையில் அச்சூல் விந்துடன் சேர்ந்து முளையமாகின்றது.

சூலகத்திலிருந்து சூல் வளரும் அதேவேளை, சூலகத்தில் உற்பத்தியாகும் பெண்பால் ஓமோன் காரணமாகக் கருப்பையில் உட்படலமும் படிப்படியாக வளர ஆரம்பிக்கும். வளருகின்ற முளையத்தை எதிர்பார்த்து அதன் தேவைக்கு ஏற்ப நல்ல இரத்த விநியோகத்தை வழங்குவதற்காகக் கருப்பையின் உட்சுவர்கள் தடிப்பாக வளர்ச்சியடைகின்றன. ஏதாவது காரணங்களினால் சூல் விந்துடன் இணையாவிடின் அது சிதைந்துவிடும். கருவைப் போசிப்பதற்கான தேவையில்லையாதலினால் முன்பு தயார் நிலையில் இருந்த கருப்பையின்




உட்படலமும் சிதைந்து போவதற்கு ஆரம்பிக்கும். இச்சிதைவுற்ற பகுதிகளும் சீதமும் இரத்தமும் யோனியூடாகி வெளியேறும். மாதவிடாய் அல்லது மாதவிலக்கு எனக் கூறப்படுவது இந்த இரத்தப்போக்கு ஆகும். பூப்படைந்தது தொடக்கம் மாதவிலக்கு அற்றுப்போகும்வரை ஒரு பெண்ணுக்கு இச்செயற்பாடு தொடர்ச்சியாக ஏற்படும்.

### இவை தவிர்க்கப்பட வேண்டியவையா?

மாதவிடாய்க்காலத்தில் குளித்தல், உடற்பயிற்சியில் ஈடுபடல், குறித்த சில உணவுப் பொருள்களை உட்கொள்ளல் போன்றவை கூடாது என்பன மாதவிடாய் சம்பந்தமான மூடநம்பிக்கைகளாகும். மாதவிடாய் காலங்களில், குறிப்பாக பூப்படைந்த காலப்பகுதியில் அப்பெண்பிள்ளைக்குக் கொடுக்கும் உணவுவகைகளில் இறைச்சி, மீன், முட்டை, எண்ணெய் அடங்கிய உணவுப் பொருள்களைத் தவிர்ப்பது சில வயது முதிர்ந்தோரது வழக்கமாகும். இவ்வுணவுகளைக் கொடுப்பதால் வயிற்றுவலி ஏற்படும் எனவும் இவை தீட்டை ஏற்படுத்தக்கூடிய உணவு வகைகள் எனவும், இவற்றை உண்பதால் மாதவிடாய் குருதி துர்நாற்றம் வீசும் எனவும் அவர்கள் கருதுகின்றார்கள். இவை மூட நம்பிக்கைகளாகும். சிலரில் மாதவிடாய்க் காலங்களில் நீர்த்தன்மையுடன் மலம் வெளியேறுவதுண்டு. இது ஒரு சாதாரண நிலைமையாகும்.

மாதவிடாய்க் காலத்தில் வயிற்றோட்டம் ஏற்பட்டால் மாதவிடாயின் ஊடாக வெளியேறும் குருதியின் அளவு அதிகரிக்கலாம். யௌவனப் பருவத்தில் உடல்துரிதமாக வளர்ச்சியடைவதாலும் மாதவிடாயின்போது குருதிவெளியேறுவதாலும் உடலிற்கு அதிக புரதமும் இரும்புச்சத்தும் தேவை. எனவே, இக்காலத்தில் புரதமும் இரும்புச்சத்தும் அதிகசக்தி தரும் உணவுவகைகளைக் கொடுப்பதைக் கட்டுப்படுத்துவதால் உடல் வளர்ச்சிக் குறைவோடு குருதிச் சோகையும் ஏற்படலாம்.


மாதவிடாய் நாள்களில் குளிப்பதால் வெளியேறும் குருதியின் அளவு குறைவடைந்துவிடும் அல்லது முற்றாக நின்றுவிடும் என்பது சிலரது அனுபவமாகும். மாதவிடாயின்போது போதிய அளவு குருதி வெளியேறாவிடின் அந்த அசுத்தமான இரத்தம் தலையை நோக்கிச் சென்று பிற்காலத்தில் மூளைநோய்கள் அல்லது வேறு உடலில் கோளாறுகளை ஏற்படுத்தக்கூடும் என்று தவறான நம்பிக்கையும் சிலரிடையே உண்டு.

வெ.நாகநாதன்
மருத்துவபீடம்,
4ஆம் வருடம்

உடலில் ஒன்று சேரும் அசுத்த இரத்தம் ஒரு மாதத்திற்கு ஒருதடவை உடலில் இருந்து வெளியேறலே மாதவிடாய் என்று கருதுவோர் உடல் சுத்தமாதல் எனவும் அதைக் கருதுகின்றனர். இதுவும் ஒரு மூடநம்பிக்கையே. எனினும், மாதவிடாய் தொடர்பான தெளிவான விளக்கத்தை நீங்கள் பெற்றுள்ளதால் இவை யாவும் ஆதாரமற்ற, தவறான நம்பிக்கைகள் என்பதை எளிதில் புரிந்துகொண்டிருப்பார்கள். மாதவிடாய் நாள்களில் குளிப்பதன் காரணமாகக் குருதி வெளியேறலில் குறைவு ஏறபடினும்கூட அதனால் உடலுக்கு எந்தவிதத் தீங்கும் ஏற்படமாட்டாது எனபதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

மாதவிடாய் தொடர்பாக நீங்கள் அறிந்திராத மேலும் சில விடயங்களை அடுத்தவாரம் பார்ப்போம் ★

**மாதவிடாய் சக்கரத்தின்போது கருப்பை உட்படலத்தில் ஏற்படும் மாற்றங்கள்**



# சிகிச்சைக் கூடத்தில் திருட்டு முயற்சி

யாழ்ப்பாணம்,மே5

யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் கூடம் ஒன்றில இரவுவேளை பூட்டு உடைக்கப்பட்டு திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்க பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைக் குழுவினருக்கு சத்திர சிகிச்சையை மேற்கொள்ள வழங்கப்பட்ட சத்திரசிகிச்சைக் கூடத்திலேயே இந்தச் சம்பவம் திங்கள் இரவு இடம் பெற்றுள்ளது.

அமெரிக்க சத்திரசிகிச்சைக் குழு நேற்றுமுன்தினம் தனது சேவையை முடித்துக்கொண்டு இங்கிருந்து திரும்பியது. அவர்களால் அங்கு விட்டுச் செல்லப்பட்ட பொருள்களை அபகரிக்கும் நோக்குடனேயே இத்திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

சத்திரசிகிச்சைக் கூடத்தில் பாவனையில் இருந்துவந்த சுவர் மணிக்கூடு அங்கிருந்து கழற்றப்பட்டுள்ளது. எனினும், திருடர்கள் எடுத்துச் செல்லவில்லை.

வேறு என்ன பொருள்கள் அங்கிருந்து திருடப்பட்டிருக்கலாம் என்ற விவரம் சத்திரசிகிச்சைக் கூடப் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. (ஐ-15)


யாழ்ப்பாணத்தில்! புதியதோர் முயற்சி!!

**நேரடி ஒலிபரப்பாளர் பயிற்சிநெறி!**
**ஊடகவியலாளர் பயிற்சிநெறி!**

என்றும் புதுமையை வழங்கும் ஜோ - எகட்டன் இலங்கை வெகுஜன ஊடக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் பயிற்சிநெறி!

*கொழும்பில் இருந்து வருகைதரும் விரிவுரையாளர்கள்
*மிகப்பிரபல்யமான ஒலிபரப்பாளர்கள் பயிற்சிகளை வழங்குவார்கள்

ஆரம்பம் ஜூன் முதல் வாரம்

பயிற்சிக்கான முழுக் கட்டணம் 5000/ மட்டும்

பதிவுக்கட்டணம் ரூபா 1000/

பயிற்சிக்காலம் 6 மாதங்கள்

★ தமிழ் மொழியில் திறமைச்சித்தி, ஆங்கிலம் சாதாரண சித்தியுடன் க.பொ.த.சாதாரண தரம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
★ எதிர்வரும் மே-31இற்கு முன் விண்ணப்பம் அனுப்பவேண்டும்.

பதிவுக்கட்டணம் ரூபா 1000/-இற்கான காசுக் கட்டளையை "**Zenith Marketing and Advertising Systems**" என்ற பெயரில் சுண்டுக்குளி தபாலகத்தில் மாற்றக்கூடியதாக விண்ணப்பத்துடன் அனுப்பவும்.

அனுப்பவேண்டிய முகவரி: **செனித் மாக்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்ரம்ஸ், மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

(C/34895)(40-12-18-33) மேலதிக விவரங்களுக்கு தொ.பே.இல. 222 - 7227





**கலைநகர் சித்தன்கேணி கம்பம்புலோ**

**அருள்மிகு சாமுண்டி அம்பிகா சமேத ஆதிவைரவப் பெருமான் திருக்கோயில் பஞ்சகுண்ட பக்ஷ புனராவர்த்தன அஷ்டபந்தன**

**மஹா கும்பாபிஷேகப் பெருவிழா**

**06.05.2004 வியாழக்கிழமை காலை 6.29 முதல் 8.20 மணிவரை**

அன்றைய தினம் காலை 5.00 மணி முதல் விநாயகர் வழிபாடும் யாக பூஜைகளும் தீபாராதனைகளும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். மாலை 7.30 மணிக்கு விசேட பூஜை, வைரவப் பெருமான் திருவீதியுலா வருவார்.

**குருமார் விவரம்**

**சர்வ போதகம்:**
'கலாநிதி சிவாகம ஞான விசாரதா'
சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்
(நல்லை ஆதீன சிவாச்சாரியார்)

**கலந்து சிறப்பிக்கும் குருமார்:**
சிவஸ்ரீ கி.கைலாசநாதக் குருக்கள்
(மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தானம்-சங்கானை)
சிவஸ்ரீ கி.பாலகிருஸ்ணக் குருக்கள்
(கொழும்பு)
சிவஸ்ரீ ஐ.ஞானக்குருக்கள் (மட்டுவில்)
சிவஸ்ரீ கி.சோதீஸ்வரக்குருக்கள் (ஊரெழு)
சிவஸ்ரீ சாமி சோமசுந்தரக் குருக்கள்
(புத்தூர் சிவன்)

**பிரதிஷ்டா பிரதம குரு:**
'சிவாச்சார்ய மணி'
சிவஸ்ரீ பா.பாலகுமாரக்குருக்கள்
(வட்டு. சிவன் தேவஸ்தானம்)

**வேதபாராயண குருமார்:**
பிரம்மஸ்ரீ சு.இராஜேஸ்வர சர்மா
(வர்த்தலை - விளான்)
பிரம்மஸ்ரீ கி.கணேசராஜ சர்மா (சங்கானை)
பிரம்மஸ்ரீ உ.கிருஷ்ணராஜ சர்மா (சங்கானை)
பிரம்மஸ்ரீ க.நந்தராஜ சர்மா (அராலி)

**சர்வ சாதகாசிரியர்:**
சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் (சித்தன்கேணி)
சிவஸ்ரீ கை.கிருஷ்ண குமாரக் குருக்கள்
(சங்கானை)
பிரம்மஸ்ரீ பா.ஆனந்தராஜ சர்மா (புத்தூர்)

**ஆசியுரை:**
'நல்லை ஆதீன முதல்வர்'
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

**பூ அலங்காரம்:**
வே.பாலசிங்கம்

**ஒலி, ஒளி அமைப்பு:**
நித்திய ஜோதி சவுண்ட்
(வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை)

**மங்கள வாத்தியம்:**
'நாதஸ்வர வித்துவான்'
திரு.எஸ்.சிவகுமார் குழுவினர் (வழக்கம்பரை)

**யாக அலங்காரம்:**
க.சபேசன் (மல்லாகம்)

**வர்ண அமைப்பு:**
திரு.ந.கிருபானந்தன் குழுவினர் (அராலி)

**சிற்பாசாரியார்:**
'சிற்ப சக்கரவர்த்தி, சிற்பசிகாமணி'
திரு.சீ.செந்தூர்ராசா (கலைநகர், சித்தன்கேணி)

மஹா கும்பாபிஷேக தினமான நாளை மகேஸ்வர பூஜையைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும். அடியார்கள் தங்களால் இயன்ற அபிஷேகத் திரவியங்கள், பூக்கள் கொடுத்து, சரீரத் தொண்டு செய்து ஆதிவைரவப் பெருமான் திருவருளைப் பெற்று வாழ்வோமாக.

கலைநகர்,
சித்தன்கேணி.

கம்பம்புலோ ஆதிவைரவப் பெருமான் பரிபாலன சபை.

(சி-34796)(33-12-18)


சபாநாயகரை வெளியேற்றும் ஜே.வி.பியின் முயற்சி

# ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட மிக ஆபத்தான அச்சுறுத்தல்

## ஐ.தே.க.மத்திய குழு கண்டனம்

கொழும்பு,மே5

நாடாளுமன்றத்தையும் சபாநாயகரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தையும் முற்றுகையிட்டு சபாநாயகரை பலவந்தமாக வெளியேற்றப் போவதாக ஜாதிக விமுக்தி பெரமுன அறிவித்திருப்பதானது ஜனநாயகத்துக்கும் நாட்டு மக்களின் அரசியல் உரிமைகளுக்கும் விடுக்கப்பட்ட மிக ஆபத்தான அச்சுறுத்தலாகும் என ஐ.தே.கட்சி விடுத்துள்ள அறிக்கையொன்றில் கண்டித்துள்ளது.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவால் விடுக்கப்பட்டுள்ள இந்த அச்சுறுத்தலானது முன்னுதாரணமில்லாத முட்டாள்த்தனமானது என்று ஐ.தே.கவின் மத்திய குழு விடுத்துள்ள மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பும் பின்பும் தமது புரட்சிகரமான அரசியலைக் கைவிட்டுவிட்டதாக ஜே.வி.பியினா கூறிக்கொண்டனர். புதிய அரசியல் கலாசாரமொன்றை உருவாக்கப் போவதாகவும் உறுதியளித்தனர். ஆனால், நாடாளுமன்றில் முதல்நாள அமர்வின்போதே காட்டுமிராண்டிக் கும்பல் போன்று நடந்து கொண்டனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெலஉறுமய பிக்குகளை அவதூறான சொற்களால் சாடினார்கள். அவர்களின் விகாரைகள் மீது தாக்குதல் நடத்தினார்கள். அவர்களின் ஆதரவாளர்களையும் அவர்களின் விடுதிகளையும் தாக்கினார்கள். ஆனால், எதிர்க்கட்சியினர் 55 வீதம் பெரும்பான்மையைக் கொண்டிருக்கின்றனர் என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். அதிக வாக்குகளைப் பெறும் வேட்பாளர் வெற்றிபெறுகின்ற பழைய முறைப்படி தேர்தல் நடந்தால் ஜே.வி.பி. ஓர் ஆசனத்தைக் கூடப் பெறமாட்டாது என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ப)

# மந்திகையில் 'சென்றி' அருகே கண்ணிவெடி அகற்றும் பணி

## டென்மார்க் நிபுணர்கள் ஈடுபடுகின்றனர்

வடமராட்சி,மே5

வடமராட்சிப் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள டென்மார்க் நாட்டு கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தற்போது புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு முன்பாக - மந்திகை இராணுவ காவலரணின் பின்புறமாக உள்ள - மந்திகை தோட்டக்காணியில் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இரண்டாயிரத்து 500 சதுரமீற்றர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையின் போது கடந்த இருவார காலத்துக்குள் 500சதுர மீற்றர் நிலப்பரப்பிலிருந்து 43கண்ணிவெடிகள், எட்டு 60எம்.எம்.மோட்டார் ஷெல்கள் மீட்கப்பட்டு கற்கோவளத்தில் பாதுகாப்பாக அமைக்கப்பட்ட கண்ணிவெடிகள் வெடிக்க வைக்கும் நிலையத்தில் வைத்து வெடிக்க வைக்கப்பட்டன. இதுதவிர கடந்த 2ஆம் திகதி இரண்டு ஆர்.பி.ஜி மோட்டார் ஷெல்கள், ஒரு இலுமினேட்டர் மோட்டார் என்பன மீட்கப்பட்டு உடனடியாக வெடிக்க வைக்கப்பட்டன. இத்தோட்டக்காணியில் இன்னமும் இரண்டாயிரம் சதுரமீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடி அகற்றும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. இவற்றை அகற்றி முடிக்க இன்னமும் இரண்டுமாத காலம்பிடிக்கும் என டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் அதிகாரி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். கண்ணிவெடி அகற்றும் பணிமுடிவடைந்ததும் இக்காணியில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

கற்கோவளம் பகுதியில் 10ஆயிரம் சதுரமீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிமீட்கும் நடவடிக்கையில் இதுவரையில் மூன்றுகட்ட நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன. அவற்றில் இருகட்டப்பணிகள் பூர்த்தியடைந்த நிலப்பரப்பு பருத்தித்துறைப் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது கட்டமாக பூர்த்தியடைந்த நிலப்பரப்பு மிக விரைவில் பருத்தித்துறை பிரதேச செயலரிடம் கையளிக்கப்படவுள்ளது. மூன்று கட்டமாக மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடி அகற்றும் பணியின்போது சுமார் 500 கண்ணிவெடிகள் வரை மீட்கப்பட்டுள்ளன.

கற்கோவளத்தில் எஞ்சிய நிலப்பரப்பில் கண்ணிவெடி அகற்றும் பணி தொடர்ந்து நடைபெறும். (ஐ-173)


**கண்ணீர் அஞ்சலி**



**திருமதி கணேஸ்வரன் ரதிதேவி (ரதி)**

"நெருநல் உள்ளொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ் வுலகு" (திருக்குறள்)

01.05.2004 அன்று சுவிஸில் காலமாகிய எமது அன்புக்குரிய **திருமதி கணேஸ்வரன் ரதிதேவி** அவர்களின் பிரிவால் ஆறாத்துயரில் இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

452, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021-222 5707

உங்கள் நினைவுகளுடன்:
அமுல் கிறீம் ஹவுஸ் & பேக்கரி,
உரிமையாளர்களும் ஊழியர்களும்.

(31637) (12)



**மரண அறிவித்தல்**

**அம்பலவாணர் பாலகிருஷ்ணன்**

**[(ஸ்ரீ-கொலண்ட்) வீமன்காமம், தெல்லிப்பழை]**

வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் கொலண்ட்டை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் பாலகிருஷ்ணன் அவர்கள் 02.05.2004 ஞாயிற்றுக்கிழமை கொலண்ட்டில் காலமானர்.

அன்னார் வீமன்காமத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் வர்த்தலைவிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் அன்னம் ஆகியோரின் அன்பு மருமகனும் சாந்தாவின் அன்புக் கணவரும் விதுரன், தூரி ஆகியோரின் அன்புத் தந்தையும் திருச்செல்வம், காலஞ்சென்ற துரைச்செல்வம் மற்றும் தவச்செல்வம், ராணி, சாரதா, பேபி, நிலாமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.05.2004) வியாழக்கிழமை கொலண்ட்டில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

துவாரகை வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

தகவல்:
ஆனந்தராஜா சறோஜா
(மைத்துனி).

(31638)(40)

# அமெரிக்க மருத்துவக் குழுவினர் மந்திகை ஆஸ்பத்திரிக்கு விஜயம்

வடமராட்சி,மே5

யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை சேவை வழங்க வருகை தந்த அமெரிக்க இராணுவ மருத்துவ நிபுணர்கள் குழு பருத்தித்துறை (மந்திகை) அரசினர் ஆதார வைத்தியசாலைக்கும் கடந்த செவ்வாய்க்கிழமை விஜயம் செய்து அங்குள்ள குறைபாடுகள் மற்றும் தேவைகள் பற்றிக் கேட்டறிந்துகொண்டது. மருத்துவ உபகரணங்கள் சிலவற்றையும், மருந்துவகைகளையும் வழங்கியது.

20பேர் கொண்ட இக்குழுவில் பல்துறை மருத்துவர்கள், தாதியர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இக்குழுவினர் வைத்தியசாலையைச் சுற்றிப்பார்வையிட்டு குறைபாடுகளையும், தேவைகளையும் அறிந்துகொண்ட பின்னர் உலக சுகாதார நிறுவனத்தின் ஆதரவில் பணியாற்றும் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் வெரனிக்கா (Veraniga) மயக்க மருந்து நிபுணர் டாக்டர் பிரில் ஆகியோரைச் சந்தித்து சத்திரசிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான தைக்கும் ஊசிகள், மயக்க மருந்து கொடுக்கப்பாவிக்கப்படும் உபகரணங்கள், ஊசிமருந்துகள் என்பவற்றை வழங்கினார்கள்

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் வெரனிக்காவின் பரிந்துரையை ஏற்று அமெரிக்க இராணுவ மருத்துவ நிபுணர் குழுவைச் சேர்ந்த சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் லெப்டினன்ட் கேணல் தோமஸ் மற்றும் தாதிய உத்தியோகத்தர் ஆகியோர் கடந்த வெள்ளிக்கிழமை இவ்வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர்கள், உதவி வைத்திய அதிகாரிகள், தாதியர்கள், புதிய தாதிகள், தாதியபரிபாலகர் ஆகியோர்களுக்கென விரிவுரைகளை நடத்தினார்கள்.

4 மணித்தியாலங்களுக்கு மேல் நடைபெற்ற இவ்விரிவுரையின்போது, காயங்கள், சத்திரசிகிச்சைகள், முதலுதவிகள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டது. செயன்முறைகளும் செய்துகாட்டப்பட்டன. அத்துடன், காயப்பட்ட ஒருவரை கையாளும் விதம், அவருக்கு அளிக்கவேண்டிய சிகிச்சை முறைகள், அவற்றைத் தரம் பிரிப்பது எவ்வாறு என்பன குறித் தும் தெளிவுபடுத்தப்பட்டது.

இவ்விரிவுரை தொடர்பாக தாதிய உத்தியோகத்தர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்-

காயங்கள் ஏற்பட்ட ஒருவரை சில சந்தர்ப்பங்களில் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனாவைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லும் நிலை ஏற்படுகின்றது. அவ்வேளையில் நாம் ஏனோதானோ என்று செயற்படாமல் அதற்குரிய முதலுதவிகளை முறையாகச் செய்து கவனமாக அனுப்பி வைக்கவேண்டும். எந்தவிதத்திலும் எமது செயல் நோயாளியைப் பாதிக்கக்கூடாது. இதுபோன்று பல்வேறு விடயங்கள் விளக்கமாகக் கிடைத்த இவ்விரிவுரை எம்மைப்பொறுத்தவரை நல்லதோர் வரப்பிரசாதமாகும் என்று தெரிவித்தார். (ஐ-173)

# அரிசியை இறக்குமதி செய்து விலையைச் சமப்படுத்தத் திட்டம்

கொழும்பு,மே5

அரிசியின் விலை கிலோ 35 ரூபாவிற்கு மேற்பட்டால் வெளிநாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்து உள்நாட்டில் அரிசியின் விலையைச் சமப்படுத்துவது தொடர்பாக அரசு ஆலோசித்து வருகிறது.

நுகர்வோரின் பளுவைக் குறைப்பதற்கும், விலைகளை அதிகரிப்பதற்காக வியாபாரிகள் பொருள்களைப் பதுக்குவதைத் தடுப்பதற்காகவுமே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாக வர்த்தக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கூறினார்.

உண்மையில் சந்தையில் அரிசிக்குத் தட்டுப்பாடில்லை. விவசாயிகள் தமது கையிருப்பிலிருந்த நெல் அனைத்தையும் குறைந்த விலைக்கு விற்று முடித்துவிட்டார்கள். வழக்கம் போல் இடைத்தரகர்கள் நிலைமையைப்பயன்படுத்தி விலையைக் கூட்டி விற்கமுனைகின்றனர். தரகர்கள் எமது ஆலோசனைகளின்படி நடந்திருந்தால் இறக்குமதி செய்யவேண்டி ஏற்பட்டிருககாது. தற்போது நாம் நுகர்வோரைக் காப்பாற்ற வேண்டிய கட்டத் திலுள்ளோம். இவ்வாறு அமைச்சர் தெரிவிததார். (ஐ-ரி)

# தொழில்நுட்பப் பூங்காக் கிளை ஆனைக்கோட்டையிலும் திறப்பு

நவாலி, மே5

தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் வலிகாமம் கிளையொன்று ஆனைக்கோட்டை கிராமசேவையாளர் அலுவலகக் கட்டடத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் கற்கை நெறிகள் ஜூன் முதலாம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளன. இக்கற்கை நெறியில் சேர்த்துக் கொள்வதற்கு இதுவரை 56 பேர் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர். சேரவிரும்புபவர்கள் இங்கு விநியோகிக்கப்படும் படிவங்களைப் பெற்றுப்பூரணப்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

யாழ்மாவட்டத்தில் மாணவர்களின் நன்மைகருதி இத்தொழில்நுட்பப் பூங்காவின் கிளைகள் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய இடங்களிலும் திறந்துவைக்கப்பட்டுள்ளன. (ஐ100)






## கண்ணீர் அஞ்சலி

### தில்லைநாதன் கெங்காதரன் (மல்லாகம்)

(தரன் அரிவு மில் உரிமையாளர்)

உடுப்பிட்டி கம்ஷா ஸ்ரீல் வேக்ஸ் உரிமையாளர் செ.தயானந்தன் அவர்களின் உடன்பிறவாச் சகோதரன் கெங்காதரன் அவர்களின் மறைவினால் அதிர்ச்சி அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினர்கட்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வதிரி வீதி,
உடுப்பிட்டி. (31692)(37-11-16)
கம்ஷா ஸ்ரீல் வேக்ஸ்
ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### தில்லைநாதன் கெங்காதரன் (ஆசாரியார்)

(தரன் அரிவு மில் உரிமையாளர்)



மல்லாகம், மில்லேனைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், நந்தாவில் அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தி.கெங்காதரன் அவர்கள் நேற்று (04.05.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தில்லைநாதன் -தவமணியின் அன்பு மகனும் நீர்வேலி பத்மறஜினியின் பாசமிகு கணவரும் கீர்த்திகாவின் அன்புத் தந்தையும் ஜீவராணி, சசிரேகா, சுபாகரன் (சப்ரக முவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் சகோதரனும் சிறிதரன், மோகன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-05-2004) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மில்லேன்,
மல்லாகம். (316441)(37-11-16)
தகவல்
சி.தில்லைநாதன்(தந்தை)

### ஐயாத்துரை இரத்தினசிங்கம்

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)



பருத்தித்துறை, சவனாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை இரத்தினசிங்கம் நேற்று (04.05.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஐயாத்துரை - மணிமாலை தம்பதிகளின் அன்பு மகனும், இரத்தினாம்பாளின் அன்புக் கணவரும், ஜெயசிங்கம், ஜெயராணி, ஜெயரஞ்சினி, ஜெயநீதி, ஜெயசிறீ, ஜெயபாலன், ஜெயபிரகாஷ் ஆகியோரின் அன்புத் தந்தையாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.05.2004) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு கோரியடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஓடை ஒழுங்கை,
சவனாய்,
பருத்தித்துறை. (சி-34899)(37-11-16)
தகவல்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

### செல்வி நடராசா கல்யாணி



நெல்லியோடை, அச்சுவேலியைச் சேர்ந்த செல்வி நடராசா கல்யாணி அவர்கள் (02.05.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா - வள்ளியம்மை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கரதடி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லியோடை,
அச்சுவேலி. (31639)(40-11-16-37)
தகவல்:
சி.நடராசா (தந்தை),
சி.கிருபா (சகோதரர்).

### சின்னத்தம்பி செல்லத்துரை



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லத்துரை அவர்கள் 03.05.2004 திங்கட்கிழமை அன்று சுவிற்ஸர்லாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னத்தங்கத்தின் அன்பு மகனும் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை - முத்தாட்சிப் பிள்ளையின் அன்பு மருமகனும் யோகராணியின் (சுவிஸ்) அன்புக் கணவரும் பாமினி (லண்டன்), தமிழினி (லண்டன்), சஞ்சீவன் (லண்டன்), றஜீவன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஜெயராஜகுரு (லண்டன்), கமலரூபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரியங்காவின் (லண்டன்) பாசமிகு பேரனாரும், கந்தையா, காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் வள்ளிப்பிள்ளை, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சண்முகரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரரும் கணபதிப்பிள்ளை, பொன்னம்பலம், நாகேஸ்வரி, ராஜினிதேவி, யோகேஸ்வரன் (சுவிஸ்), யோகேஸ்வரி, யோகச்சந்திரன் (சுவிஸ்) யோகராஜா (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும் செல்வராணி (சுவிஸ்), சண்முகம், காமினி (சுவிஸ்), சிவாநந்தி (நோர்வே) ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரரும் அருள்விழி (சுவிஸ்), இளமாறன் (சுவிஸ்), அந்தூரி (சுவிஸ்), அபிஷன் (சுவிஸ்), அபிஷேக் (நோர்வே) ஆகியோரின் அருமை மாமனாரும் விஜிதரன (நோர்வே), சசிகரன், வோகரஜனி, நிலாணி ஆகியோரின் அருமைப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மத்தி,
கைதடி. (31640)(37-11-16)
தகவல்
வே.சண்முகம் குடும்பம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தம்பகாமம், பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கௌரவ தலைவரும் கமநல சேவை நிலையம் பளையின் தலைவரும். பணிப்பாளர் சபை உறுப்பினர் கிளி./முல்லை கிராமிய வங்கி சமாசம், பணிப்பாளர் சபை உறுப்பினர் கிளி.மாவட்ட கூட்டுறவு ஒன்றியம், உப தலைவர் கிளி.மாவட்ட கமக்காரர் அமைப்புக்களின் சமாசம், கமக்காரர்அமைப்பு தம்பகாமத்தின் தலைவருமாகிய

உயர்திரு.
**சின்னத்தம்பு வதனராசா**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக 19-02-2004 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராசா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் எடுத்தமையையும் 26-04-2004 முதல் மாசார் அ.த.க.பாடசாலை ஆசிரியராகவும் நியமனம் பெற்றமையையிட்டும் அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் பச்சிலைப்பள்ளிவாழ் மக்களுக்கு அவரின் சேவைகள் மேன்மேலும் தொடர, அவரும் அவர் தம் குடும்பத்தினரும் சகல சௌபாக்கியங்களுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர்.
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்,
பளை.
(சி34900)(43-11-16-37)


## புதுக்கடைத் திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் சித்திரை 24 ஆம் நாள் நாளை (06.05.2004) வியாழக்கிழமை காலை 6மணிமுதல் 9மணிவரையுள்ள சுபவேளையில் எம்மால் இல.5, ஐயனார் கோவில் வீதி, ஆலடிச் சந்தியில்

**ஷான் உணவகம்**

எனும் உணவகம் ஆரம்பிக்கப்பட இருப்பதனால் அத்தருணம் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.5, ஐயனார்கோயில் வீதி,
ஆலடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.
வரவேற்பாளர்:
இ.தயாகரன் (வவா)
(31644)(32-11-16)

கொம்பியூட்டர்
பொலிமர்
இறபர் முத்திரை
இலவசம்
ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு:
யசோ,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(30331)(18)

லக்ஷ்மி இணுவில்
சிம்பு, த்ரிஷா நடித்த
அலை
மே 7 முதல்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
சூரியா (2 வேடங்கள்), ஜோதிகா
மிகப் பிரமாண்டமான தயாரிப்பில்
பேரழகன்
(ரீல்ஸ்)
தினசரி 4 காட்சிகள்

(31645)(12)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஸ்ரீகாந்த், பூமிகா,
விவேக் நடித்த
ரோஜாக் கூட்டம்
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 பு.நே.
வெள்ளி சனி ஞாயிறு இரவு 8.45 இரவு பு.நே.
DO NOT DISTURB


(சி34420)(12)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
விஜய், த்ரிஷா,
பிரகாஷ்ராஜ்
நடித்த
கில்லி
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(ரீல்ஸ்)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(C34517)(22)

நாகம்ஸ் சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதினத்தில் டொல்பி ஒலி அமைப்புடன்
விக்ரம், ஜோதிகா,
கபாலி, வடிவேல் நடித்த

அருள்
காட்சி நேரம்:
11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)
ஆசனப் பதிவுகளுக்கு:
நாகம்ஸ் பாட்டா சுன்னாகம்,
நாகம்ஸ் சினிமா.
(C34180)(22)

யாழ்ப்பாணம்



## கடலில் வீழ்ந்தவரை தேடும்பணி தாமதம்

யாழ்ப்பாணம்,மே5

கடந்த ... க்கிழமையன்று நெடுந தீவுக் கடலில் படகில் பயணித்துக் கொண்டிருந்தபோது கடலில் வீழ்ந்த வரான சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் இ.ஜெயசீலனை தேடும்பணி நேற்றும் தொடர்ந்தது. எனினும் கடல கொந்தளிப்பு இருபபதால் தேடும் பணியில் தாமதம் ஏறபட்டுள்ளது. (ஓ-9)

## முன்நிபந்தனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணங்கிச் செயற்படுவதில் தொடர்ந்து பற்றுதியுடன் தாங்கள் இருப்பதை அவர் மீள உறுதிப்படுத்தினார்.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு புலிகள் எந்த நிபந்தனையும் முன்வைக்க வில்லை என்று நோர்வே அனுசரணை யாளர் தெரிவித்தனர்.

நோர்வே அனுசரணையாளர்கள் மூலம் தெரிவிக்கப்பட்ட ஜனாதிபதியின் செய்தியை தமிழ்ச்செல்வன் மெச்சினார்.

புலிகளுடனான தங்களின் கலந்தாலோசனைகள் ஆக்கபூர்வமாக இருந்தன என அனுசரணையாளர் விவரித்தனர். மேலும் முன்னேற்றம் குறித்து அவர்கள் நம்பிக்கையாக உள்ளனர்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பாலசிங்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

சுமார் ஒரு வருடத்தின் பின்னர் பாலசிங்கம் மீண்டும் வன்னிக்கு வருகை தரவுள்ளார். கடந்த ஆண்டு மே மாதம் வன்னிக்கு வந்திருந்த அவர் அவசர சிகிச்சைகளுக்காக விரைவில் லண்டன் திரும்பினார். தொடர்ச்சியான ஓய்வில் இருக்கும்படி டாக்டர்கள் அவருக்கு ஆலோசனை வழங்கியிருந்தனர். அதன்பின்னர் கடந்த ஆண்டு இறுதியில் அவர்தனது கடமைக்குத் திரும்பியிருந்தார். (க)

Hardware Engineering
படிக்கவிரும்பும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
1. Dip. in Hardware Eng. (ஒருமாதம் 75 மணித்தியாலயங்கள்)
2. Advanced Dip.in (Hardware Eng. 6 மாதம்)
3. Graducate Ship in Hardware Eng. ஒரு வருடம் Institute of British Engineers இனால் Certificate வழங்கப்படும். இப்பயிற்சி நெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கு லண்டன் C.C.L பல்கலைக்கழகத்தில் அல்லது Irish International University (EU) மேற்படிப்பைத் தொடர்வதற்கான VISA வழங்கப்படும்.
Dip.inMs Office / Dip.in DTP } 2மாதம்
ஆரம்பம் 05-05-2004
NORTH LANKA
(INSTITUTE OF INFORMATION TECHNOLOGY)
பிரதான வீதி, சங்கானை (31631)(32)

## தேடுதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட சம்பவத்தையும் கடுமையாகக் கண்டிக்கிறோம் என்று அத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் இந்தச் சூழலை பாதகமுள்ளதாகவும் ஆரோக்கியமற்றதாகவும் மாற்றாமல் உத்தரவாதத்தை ஜனாதிபதி தரவேண்டும் - என்றும் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஓ-3)

## தராகியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்ட விசேட பொலீஸாரே அங்கு சென்று சோதனை நடத்தினர்.

அப்பொழுது சிவராம் வீட்டில் இருக்கவில்லை. உலக ஊடகச் சுதந்திர தினத்தையொட்டிய நிகழ்வில் கலந்துகொள்ள மட்டக்களப்பு சென்றிருந்தார். அவரது குடும்பத்தினர் மட்டுமே அப்பொழுது வீட்டில் இருந்தனர்.

பயங்கர ஆயுதங்கள் பதுக்கி வைக கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே தாம் தேடுதல் நடத்தவந்தனர் என்று குடும்பத்தவரிடம் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துக்கு கருணாவின் சகாவான புளொட் மோகனே காரணம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

புளொட் மோகன் தற்பொழுது களுபோவிலயில் தங்கி இருக்கிறார் என்றும் சிவராமைப் பயமுறுத்தும் நோக்கத்துடனேயே அவர் பொலீஸாரை ஏவி இதனைச் செய்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. (க)

...சன்
கல்வி நிலையம்
CHEMISTRY
A/L 2005 ORGANIC
Thu: 3.00, Fri: 4.00
ஆரம்பம்: 06-05-2004
A/L 2006 General Chemistry
ஆரம்பம் :10.05.2004
Mon:3.00p.m.
By:V அன்பழகன (B.Sc.)
(31626)(32)

## பிரி.அதிகாரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டில் சில பகுதிகளைப் பார்வையிட்ட அவர் பின்னர் முகமாலை சோதனை நிலையப்பகுதிக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானித்தார்.

அதனைத் தொடர்ந்து ஏ9 வீதியூடாக அவர் வவுனியா சென்றார். (ஓ-3)

## சமாதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ச்செல்வனோடு தாங்கள் நடத்திய பேச்சு விவரங்களை அவர்கள் உடனடியாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்குத் தெரியப்படுத்தினர் என்றும் - கூறப்பட்டது.

அமைச்சர் கதிர்காமர், தற்போது நுவரெலியாவில் தங்கியிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் இவ்விடயங்கள் குறித்து ஆலோசித்த பின்னர், இன்று மீண்டும் நோர்வே அனுசரணைக்குழுவினரைச் சந்தித்து புலிகளின் நிலைப்பாடுகள் தொடர்பாக அரசுப்பக்கத்தின் பதிலை அவர்களுக்குத் தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று நோர்வேக்கு புறப்படும் முன்னர் விஷேட அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் அடங்கிய அனுசரணைக குழு, எதிர்க்கட்சித் தலைவரும், ஐதே. கட்சித் தலைவருமான ரணில்விக்கிரமசிங்கவைச் சந்தித்து இதுவரை மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகள் குறித்து அவருக்கு விளக்கும் என்றும் -

புதிய அரசு முன்னெடுத்திருக்கும் சமரச முயற்சிகள் தொடர்பாக எதிர்க் கட்சித் தலைவரின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள அக்குழு முயலும் என்றும் கூறப்பட்டது.

SHAMROCK
J/EACHCHAMODDAI Rd.
A/L - 2006
Com. Mr.பசில் B.B.A
Acc. Mr. தவா B.Com. (Hons) (Acc.spl.)
Econ. Mr.விக்கி B.A (Hons) (Econ. spl.)
Eng. Mr.ஜெயக்குமார B.A.
Log: Mr.கலைச்செல்வன B.A
TAM.GEO.CHRIST. நடைபெறுகின்றன.
(31625)(43)

## அனுசரணைப் பணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை நேற்று சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்களில் நோர்வேயின் பங்கு தொடர்பாக ஜே.வி.பி. காரசாரமான கருத்துக்களை வெளியிட்டுவரும் நிலையில் சொல்ஹெய்ம் இவ்வாறு தெரிவித்துள்ளார். நோர்வே, அனுசரணைப்பணியை மட்டுமே செய்ய வேண்டும் மத்தியஸ்தப் பணியில் இறங்கக்கூடாது எனவும் ஜே.வி.பி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, இலங்கை சமாதான முயற்சிகளில் இந்தியாவின் பங்கு பற்றி அரசு அதிகம் கருத்துத்தெரிவித்து வருகின்றதே என்று நேற்றைய சந்திப்பில் தமிழ்க் கூட்டமைப்பினர் சொல்ஹெய்மிடம் வினவியதற்கு இந்தியாவின் கொள்கையில் மாற்றமில்லை என்று அவர் பதிலளித்தார்.

இந்தச் சமாதான முயற்சிகளை இந்தியா முழுமையாக அங்கீகரித்துள்ளது. அதில் நோர்வேயின் பங்களிப்புப் பற்றி இந்தியாவுக்கு அவ்வப்போது விளக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இந்தியா, நோர்வேயின் பணியை ஏற்றுக்கொண டுள்ளது.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் மாற்றம் ஏதும் ஏற்பட வேண்டும் என்று இந்தியா விரும்பவில்லை. எந்த அரசு மாறினாலும் இந்தியாவின இந்த நிலையில் மாற்றம் இருக்காது என்றே நம்புகின்றோம் - என்றார் சொல்ஹெய்ம். (க)

## இடைக்காலத் தன்னாட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரிவாகப் பேச்சு நடத்தியது.

தமிழ்க்கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் 12 எம்.பிக்களைக் கொண்ட குழு இச்சந்திப்பில் பங்கு பற்றியது.

அச்சமயம் தமிழ் மக்களின் பல்வேறுபட்ட விடயங்கள் குறித்து கருத்துக்கள் அங்கு முன்வைக்கப்பட்டன. அவற்றில் சில வருமாறு:-

★ தமிழ்க் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் புலிகள் தான் தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று தெரிவித்து அதற்கான மக்கள் ஆணையைப் பெற்றுள்ளது. எனவே, விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஸ்ரீலங்கா அரசு ஏற்று, அவர்களுடன் மட்டும் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்கவேண்டும்.

★ இடைக்கால தன்னாட்சி அதிகார சபை பற்றியே முதலில் பேச வேண்டும். அதுவும் காலம் தாழ்த்தாது உடன் பேச வேண்டும்.

★ கடந்தகாலப் பேச்சுக்கள் எந்த இடத்தில் நிறுத்தப்பட்டதோ அந்த இடத்தில் இருந்து மீண்டும் பேச்சை ஆரம்பிக்கவேண்டும்.

★ யுத்தநிறுத்த மீறல்கள் கிழக்கில் தொடர்கின்றன. அத்தகைய நிலை தொடராமல் சுமுகமான நிலை ஒன்றை அரசு ஏற்படுத்த வேண்டும். அதுவே பேச்சுக்கள் ஆரோக்கியமாக முன்நகர உதவும்.

★ பேச்சை ஆரம்பிப்பதாகக் காட்டிவிட்டு அதைப்பயன்படுத்தி அரசு தன்னைப்பலப்படுத்துவதிலும், சர்வதேச உதவிகளைப்பெறுவதிலும், தமிழர் தரப்பின் ஆதரவைப்பெற்று அரசை ஸ்திரப்படுத்துவதிலும் ஜனாதிபதி ஈடுபடக்கூடும் என்று நாம் சந்தேகிப்பதால் அவ்வாறு நடக்காமல் இருக்க இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையைப் புலிகளிடம் கையளிக்க முன்வர வேண்டும்.

அப்படிப்பேச்சை தவறான முறையில் பயன்படுத்த, அரசு செயற்பட முனைந்தால் தமிழ்மக்கள் சமாதானப் பேச்சுக்கள் மீதான நம்பிக்கையை இழப்பர்.

இப்போது ஆர்வத்துடன் பேச்சை ஆரம்பிக்கும் ஜனாதிபதி பின்னர் ஜே.வி.பியைக் காரணம் காட்டி பேச்சுக்களிலிருந்து பின்வாங்க முயலலாம். அப்படிச் செய்யமாட்டார் என்பதை அவர் முதலிலேயே திட்டவட்டமாக உறுதிப்படுத்த வேண்டும்.

- இப்படி கூட்டமைப்பினர் நோர்வேக் குழுவுக்குத் தெரிவித்தனர். (க-3)

## கண்ணீர் அஞ்சலி

'உதயன்' மடிப்பு விநியோகப் பகுதியில் கடமையாற்றிய

**சிவனேசன் பாபுசங்கர்**

அவர்கள் கடந்த 02.05.2004 (ஞாயிற்றுக்கிழமை) அகாலமரணமானார். அவரது திடீர் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக இயக்குநரும், பணியாளர்களும்
உதயன் நிறுவனம் (சி-34897)(32-11)

தென்னிந்தியாவில் இருந்து
நான்காவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள
பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்

ராஜகுருசாமி அவர்கள்
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 2004ஆம் ஆண்டு புதுப் பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ். மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வருகை தந்துள்ளார்.
பார்க்கும் நேரம்: காலை 9.00 - 6.00 மணி
கைரேகை மட்டும் 9.00 - 1.00 மணிவரை
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம் ★ பெயர்ராசி ★ திருமணப் பொருத்தம்
இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர். (31595)
ராஜகுருசாமி மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ் T.P. 5867
60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...
யாழ் பயணத்தின் போது
ரோல்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!
யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 011 4512666 (3 Lines) Fax: 011 4514700
வெள்ளவத்தை - 011 2 360290, 2 360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com
இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் - கொழும்பு விமான சேவை

நயினை நாகபூசணி துணை
மங்களகரமான திறப்பு விழா அழைப்பு
திருநெல்வேலி நவீன சந்தைக் கட்டடத்தில்
இன்று (05.05.2004) புதன்கிழமை
ஆராதனா ஆடியோ வீடியோ விஷன்
திறப்புவிழா நிகழ்வு நடைபெறுகின்றது.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இல.05, நவீனசந்தை மேல்மாடி, திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி. (31633)(32-11)
எம்மிடம் ஓடியோ, வீடியோ கசெட், வீடியோ கசட்களை CD யில் பதிவுசெய்தல், MP3, DVD Cassette விற்பனை மற்றும் பழைய புதிய பாடல்கள், பக்திப்பாடல்கள், பட்டிமன்றங்கள் (லியோனி), நகைச்சுவை தொடர்கள், வேலன், மெட்டிஒலி போன்ற சின்னத்திரை தொடர் நாடகங்கள் இன்னும் பல்வேறு ஆடியோ, வீடியோ தேவைகளையும் பூர்த்திசெய்ய எம்மை நாடுங்கள்.
மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.
பா.வசந்தன். T.P.0777-354450

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.